# சாஹெப் வலியுல்லாஹ்

# பொருளடக்கம்

அத்தியாயம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| I | சாஹெப் வலியுல்லஹீ இளமையும் கல்வியும் | 12 |
| II | சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் தொண்டு | 37 |
| III | சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் தர்ஹா ஷெரிபின் அமைப்பு | 68 |
| | முடிவுரை | 75 |

ஆரம்பமும், முடிவுமாக அல்லாஹ் ஒருவனுக்கே எல்லாபுகழும், வளமும் சாந்தியும் தற்கத்திருமேன். ஊருகை ரட்சகர் நபிகட்கோமான் பெருமானார் அலைஹி அவர்கள் மீதும் அவர்களுடைய அன்பு திளையார்கள் மீதும் உத்தமத் தோழர்கள் மீதும் என்றென்றும் நிலவுக.

"யார் மனிதர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ, அவர் அல்லாஹுக்கு நன்றி செலுத்தாதவரானார் என்று உறத்தின் அடிப்படையில் உறஜீரத்தையத் ஷா சிராஜ்த்தின் முகம்மது சங்காப் வலியுல்லாஹ் அவர்களைப் பற்றிற ஆய்வில் எனக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்குக் நன்றி சொல்லக்கடமைப்பட்டுள்ளேன்.

முதலில் சாஹெப் வலியுல்லா அவர்களைப் பற்றிய செய்திகளை முழுமையாகவும் மன நிறைவை அளிக்கும் விதத்துடனும், இன்முகத்தோடு, என்னையும், என் சகோதரர் மற்றும் மாமாமகன் ஆகிய அனைவரையும் அன்வுடனும், அமைதியுடனும் புன்முறுவலுடன் தமக்கு எவ்வளவோ முக்கிய வேலைகள் இருந்தும் எங்களை அன்புடன் வரவேற்று நான் கேட்ட கேள்விகளுக்கும், என் சகோதரர் கேட்ட கேள்விகளுக்கும் இன்முகத்தோடு விளக்கி அதற்குன்டான ஆதாரத்துடன் மெய்பபித்து, எனக்கு இந்த ஆய்விற்குத் தேவையான அனைத்து ஆராங்களும் தந்தது மட்டுமில்லாமல், வலியுல்லாஹ் அவர்களின் குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் என்னை அறிமுகப்படுத்தி எனக்கு உதவுமாறு வேண்டி, நான் சென்ற போதெல்லாம் எனக்கு உதவிய தன்னடக்கமும், அறிவாற்றலும் கொண்ட சுயநலமற்ற இளம் வயதுள்ள முதியோரும், மக்கள் துயர் துடைக்கும் பண்பிலும் சன்மார்க்க பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட வலியுல்லாஹ் அவர்களின் இளைய புதல்வரும் அனைத்து மக்காளும் இன்று சோட்டே (சில்ல) சாஹெப் என்று அன்புடனும், மதிப்புடனும் மரியாதையுடனும் அழைக்கப்படும் சையத் அப்துல் ரஸீல் சக்காப் தஃஜீம் தரக்காதிரி உஷித்தாரி என்கிற

சையத் வஜீஹின்கி சக்காப் அவர்களுக்கு என்னின் பணிவான தாழ்மையான நன்றிகள் சமர்ப்பிக்கின்றேன்.

சாஹெப் வலியுல்லா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் சாஹெ்ப விருந்தோம்பல், பண்பலும், சாஹெப் அவர்களின் அனைத்து பணிகளிலும் பங்குக் கொண்டு, யார், எவர் என்று பார்க்காமல் தம்மை நாடிவரும் அனைவரையும் அன்போடு, பாசத்துடன் வரவேற்று, தம் கனவரைப்ப பற்றிய செய்திகளை அறிய சாஜிதுவனிசாபீவி சாஹெபா அவர்களுக்கும் மற்றும குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் என்னுடைய உள்ளம் கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சாஹெப்லில்லா பற்றிய ஆரம்பக்கால அற்புத்தகளைப் பற்றியும், அவர்கள் ஏழை, எளிய மக்களிடம் நடந்து கொண்டதைப் பற்றியும் மட்டுமில்லாமல், சாஹெப் அவர்களின் வளர்புபம் தாயாரின் பெருமைகளையும் கூறி இஸ்லாம் மார்க்கத்தில் சட்டத்திட்டத்தின் போன்றவற்றை விளக்கி உலகென்கிலும் தர்க்காக்கள் உள்ளன. வலிமார்கள் (அவுலியாக்கள்) இருக்கின்றார்கள். அவர்களிடங்களில் அற்புதங்கள் நிகழ்கின்றன போன்றுவற்றை ஆதாரத்துடன் விள்க்கி, ஹொபி இயக்கத்தைபி பற்றி தெளிவுப்படுத்திய சாஹெப் வலியுல்லா அவர்களின் இணைப்பிரியா சகோதரர் கையத்ஹா சிராஜ்த்தின் அஹமத்பாட்ஷா சக்காபீ காதிரி சித்தாரி என்கிற சையத்ஹா அஹ்மத்பாட்ஷா சக்காபீ அவர்களுக்கும், இவர்களது மூத்த மகனாரான ஷையத்ஷா நியாமத்துல்லா சக்காப்காதிரி, ஹித்தாரி என்கிற சையத்முயீன் அஹமத் சக்காப் பி.இ., துபாய் (யு. ஏ. இ.) அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றும் சாஹெப் வலியுல்லாவே கறி என்று தம் சொந்தங்கள், பந்தங்கள், சொத்து, சுகம், என்ற அனைத்தும் துறந்து தம்மை சாஹெபின் அடிமையாக்கிக் கொண்ட எஸ்.பாபாபாய் (தர்காவில சாஹெப் அவர்களுக்கு வேசை செய்கிறார்) அவர்களுக்கும், "சாஹெப்" என்ற நாவால் சொல்லும்போதே பயத்துடனும், பக்தியுடனும் வலியுல்லாவிற்கு மதிப்பும், மரியாதையும்

செய்து, தம்மை அடிமை என்றும் கறி தர்காவின் சேவை செய்யும் வக்கலுகிபாய் என்கிற அபதுல் வக்கீல் சாஹெப் அவர்களுக்கும், சாஹெப் அவர்களின் முரித்கிகளாகிய சையது முகமது ஹீசைவி (ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி), டாக்டர்.கே.ஏ.என்.அன்சார், அஹமது இஷ்சானுல்லா ஆகிய இவர்கள் அனைவருக்கும் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும், தர்காவில் சேவை செய்யும் அனைத்து சேகவர்களுக்கும், மொத்தத்தில் தர்காவில் இருக்கும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை கூறுகிறேன்.

இறுதியாக மாணவர்கள் மனமறிந்து அவரவர் தேர்வு செய்த ஆய்வுகளின் தலைப்புகள் ஏற்றுக் கொண்டும் எதை எப்படி செய்ய வேண்டும் என்று எங்களுக்கு விளக்கியும், நான் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி தெளிவாக விளங்கி புரிந்துக் கொள்ள்ககூடிய ஓர் அறிய வாய்பபை ஏற்படுத்திக் கொடுத்த எங்களைவ வழி நடத்துகின்ற குருவாகிய எங்கள் ஆசான் முனைவர் நா.இராஜேந்திரன், துறைத்தலைவர், வரலாற்று மையம், மற்றும் எங்கள் வகுப்பு ஆசிரியர். பாரதிதாசன் பல்கலைக்கழகம், அவர்களுக்கும், எங்களது அனைவர் சார்பிலும் பணிவான தாழ்மையான ந்னறியைத் மகிழ்வுடன் கூறுகின்றேன்.

மற்றும் நான் எழுதிய இவ்வாய்வுக் கட்டுரையை திருத்தம் செய்து உதவிய எங்களது சிறப்பு வகுப்பு பேராசிரியர் திரு.பி.கிருஷ்ணமூர்த்தி (ஓய்வு பெற்ற பேராசிரியர், ஜமாள் முகம்மது கல்தா ரி, திருச்சி) அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றறியைத் தெரிவிக்கிறேன்.

வஹாபி இயக்கத்தைப் பற்றியும், குர்ஆனின் வசனங்களை தெளிவுப்படுத்தியும் இப்போது முஸ்லிம்களை குழுப்பும் ஒற்றுமையை குலைக்கும் தபில்க் போன்ற இயக்கங்களைப் பற்றியும் எனக்கு விளக்கிய சாஹெப் அவர்களின் மகனார் சின (சோட்டே) சாஹெப் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றிக் கூறி என்னுடைய முகவுரையை முடித்துக் கொள்கிறேன்.

# முன்னுரை

## ஏன், எதற்கு?

அளவற்ற அருளாளலும், நிகரற்ற அன்புடையோதுமாகிய அல்லாஹ் ஒருவனுக்கே எல்லா புகழும் என்று கூறி என்னுடைய முன்னுரையை தொடங்குகிறேன். சாஹெப் வலியுல்லா பற்றி ஆய்வு மேற்கொள்ளும் போது என்னை நீர் ஏன் எதற்கு இந்த தலைப்பை எடுத்தாய் என்று எல்லோரும் கேட்டார்கள். ஆனால் என்னால் வார்த்தையால் பதில் சொல்ல தெரியவில்லை. சுருக்கமாக இறைவனையும், அவனுடைய நேர்களையும் (வலியுல்லாக்கள்) அவர்கள் புரியும் அற்புதங்களையும் நான் அறிந்துக் கொள்ள விருப்பப்படுகிறேன் என்றே பதிலுரைத்தேன். ஆனால் இது ஒரு காரணமாக இருப்பினும், மிக முக்கியக் காரணமான வஹாபி இயக்கம் தான். ஏன் என்றால் இந்த இயக்கத்தில் இருந்து பிறந்த கிளைகள் தப்லக், எஸ்அய்எம், தேவ்பந்தி, ஜமாத்தே இஸ்லாமி, நத்லி, சலமி போன்ற அனைத்தும் இஸ்லாமிய மக்களை குழுப்புவதுடன், முன்னோர்கள் செய்த செயல்கள் (பாத்திஹா ஓதும முறைபோன்றவைகளை) அனைத்தும் குறைக்கறியும், வலிமார்கள் இல்லை, இறந்தபின் எவரும் வரமாட்டடார். தர்ஹாவுக்கு பெண்கள் செல்லக்கூடாது. தர்ஹாவில் 20 ரக்அத் தொழுகை (ரம்ஜான் மாதத்தில் இரவில் தொழும் சிறப்புத் தொழுகை) இல்லை என்றும், குர்ஆன் வசனங்களையும், உறுதிதுகளையும் தவறாகப் புரிந்துக் கொண்டு, தவறான வழியை காட்டும் இந்த பித்தலர்ட்டக்காரர்கள் யார் என்பதையும் தெளிவாக புரிந்துக் கொண்டு இல்லாத்தில் எந்த வழியை யார் சொல்வதை பின்பற்றுவது என்பது பற்றி தெரிந்துக் கொள்ளவும் இப்போது இருக்கும் இஸ்லாமிய மக்கள் நிலையை எண்ணிப் பார்த்தும், தர்ஹாவில் நடக்கும் உண்மையை கண்டறிய வேண்டும என்று எண்ணியே இந்த தலைப்பை எடுத்தேன். மேலும் வலியுல்லாஹ் என்பவர் யார்? அவர்களுக்கும், இறைவனுக்கும் உள்ளத் தொடர்பு என்ன? ஆகியவற்றை அறிய வேண்டுமானால் ஒர் வலியுல்லாஹ்வை பற்றி ஆய்வு செய்தால் பலன் கிடைக்கும் என்று எண்ணி, இப்போது 4, 5 வருடங்களில் தமிழகம் முழுவதும் மக்கள் அறிந்துள்ள தஞ்சையில் உள்ள ஆப்ரஹாம் பஸ்டிதர் ரோட்டில் அமைந்துள்ள சாஹெப் வலியுல்லாஹ் அவர்களைப்பற்றிய ஆய்வில் ஈடுபட்டேன். நான் இந்த ஆய்வை மேற்கொண்டதால் எனக்கு கிடைக்க வேண்டிய அனைத்து ஆதாரங்களும், செய்திகளும் இஸ்லாமிய சட்ட அடிப்படையில் கிடைத்தது. இந்த ஆய்வு செய்யாமல் நான் இருந்து இருப்பேயானால் நானும் ஓர் வஹாபியாக

மாறி இருப்பேன். ஏன் என்றால் ஹபிகளின் பேச்சுக்கள் அப்படியிருக்கின்றன. நான் எப்போதும் ஐந்து வேலையும் தொழுது அல்லாவிடம் வேண்டிக்கொள்வது "எங்கள் அனைவரையும் நேர்வழியில் நடந்து இறவைா, கேடு விளைவிக்கும் கட்டத்தில் எங்களைச் சேர்த்துவிடாதே" என்று தான் எப்போதும் இறைவனிடம் பிராத்தனை செய்துக் கொண்டே இருப்பேன் என்னுடைய இந்தப் பிராத்தனை வீன்போகா வகையில் இறைவன் என்னுடைய இந்த ஆய்வின் மூலம் நேர்வழிப்படுத்த வழி செய்தான். இதற்காக இறைவனுக்கு மிகுந்த நன்றியைக் கூறுகிறேன்.

இப்போது வலியுல்லா என்பதற்கடிடான பொருளைப் பார்ப்போம். திருக்குர்ஆன் ஷரீபில் வலி என்ற ஒருமைச் கொல் நாற்பத்தி நான்கு இடங்களிலும் "அவ்லியா என்ற பன்மைச் சொல் 44 இடங்களிலும், "விலாயத்" என்ற அல்லாஹுவால் கொடுக்கப்பட்ட "இறைநேசர்" என்றப் பட்டபெயர் ஓரிடத்திலும் சொல்லப்பட்டுள்ளது. விலாயத் என்ற சொல்லிலிருந்து பிறந்த சொற்களே "வலி" என்ற ஒருமைச் சொல்லும் "அவ்லியா" என்ற பன்மைச் சொல்லும் ஆகும்.[1]

"வலி" என்ற அரபி பதத்திற்கு தமிழில் "நேயர்" என்பது பொருள். யாருடைய நேயர் என்று சுட்டிக் காட்டுவான் வேண்டி, "அவ்லியா அல்லாஹ் என்ற அரபியில் சொல்லப்படுகிறது. இதற்கு இறைநேயர் என்பது பொருளாகும்.

இந்த இறைநேயர்கள் தங்களுடைய நற்செயல் பண்புகளால் இஸ்லாமிய நற்கிரியைகளை மேற்கொண்டு செயற்பட்டு வந்ததல் காரணமாக இவர்களை "அல்லாஹ் தன்னுடைய நேயர்கள் என்று ஏற்றுக்கொண்டான். நாம் அனைவரும் இறைவனுடைய அடியார்கள். அடியானுக்கும நேசனுக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. அடியான் என்பவன் எஜமானைவிட்டு விலகியே நிற்க வேண்டும். நேயர்களோ எஜமானனை அண்டி அமருவார்கள்.[2]

---

1 கா.சையத் அப்துல் கபூர், <u>அன்லியக்கலை அனுகுங்கள்</u> (மதுரை, நியூ பாப்புலர் பிரிண்டர்ஸ்) ப. 5

2 மேலது.

"அல்லாஹ் வின் கட்டளைகளையும், முகம்மது நபி அவர்களின் போதனைகளையும் சிரமேற்கொண்டு சன்மார்க்க நெறியில் நடந்து "ஷரியத்" என்று இஸ்லாமிய சட்டத் திட்டங்களையும் "உறக்கத்" என்ற இஸ்லாமிய உண்மைகளையும "மஃரிஃபத்" என்ற ஆத்ம முன்தியையும் ஒருங்கே பெற்றவர்களே "அன்லியாக்கள்" என்று அழைக்கப்படுபவர் ஆவர்.[3]

"மெய் ஞான ஜோதியை தன் கட்டளையால் தன் அடியாளர்களில் தான் நாடியவர்கள் மீது பிரகாசிக்கச் செய்கிறான். இறைவன் என்ற அல்குர்ஆன் 45–வது அத்தியாத்தில் 15ம் வசனம் பறைசாற்றுகின்றது. அல்லியாக்கள், "இல்முல்லதுன்னி" என்று இறைவனால் அருளப்பற்ற மெய்ஞானத்தைப் பெற்றவர்கள். அவர்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உத்திரவுப்படி உலகில் பல திசைகளிலும் சென்றும், தம் உடல், பொருள் ஆவி அனைத்தையும் இஸ்லாத்திற்காகவே தத்தம் செய்து இஸ்லாமிய சேவையையே தனது பிறப்புரிமையாகக் கொண்டு செயல்பட்டவர்கள். இவர்கள் "கராமத்" என்ற அதிசயங்களை மக்களுக்குச் செய்துக் காட்டினார்கள். இவை அல்லாஹ்லால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அருள் கொடையாகும்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் நான் கல்வியின் பட்டனம் என்றால், அலி ரலி அவர்கள் அதன் வாயிலாக இருக்கின்றார்கள், என கூறுகிறார்கள். மேலும் அவர்களது வாரிசான அலிரலி அவர்களை

---

3 கா. சையத் அப்துல் கபூர், அல்லியக்கக்களை அணுகுங்கள் (மதுரை, நியூ பிரிண்டர்ஸ்) ப. 5. சுட்டிக்காட்டியுள்ளார்கள். மார்கக அறிஞர்கள் என்னுடைய வாரிசுகள் என்றும், எனது சஹாபா பெருந்தகையர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள்" என்றும், அவர்களுள்ள எவரைப் பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழியைப் பின்பற்றியவர்களாக அவர்கள் என்று நவின்றுள்ளார்கள். இவ்வழியை பின்பற்றும் மக்களே "சுன்னத் வல் ஜமாதி" மக்களாவர்.

**வஹாபி இயக்கம் உருவான வரலாறு** 1

மேற்கூறிய அனைத்திற்கும் மாறாக நடப்பவர்களே வஹாபி இயக்கத்தினர் ஆவர். "என்னுடைய உம்மத்துகளில் (நபிவழியை பின்பற்றுவோர்) 73 கட்டங்களாக பிரிவர். இதில் ஆதி கட்டமாகின சுன்னத் ஜமாத்தை தவிர ஏனைய 72 கட்டங்களும் நரகவாசிகளே என பெருமானார் (ஸல்) கூறியுள்ளதாக முஸ்லீம், புகாரி போன்ற அதிது கிரதங்கள் சான்று பகீர்கின்றன.

ஒருமுறை அண்ணல் நபியவர்கள, இறைவா! எங்களின் ஷாமுக்கும், யமனுக்கும் அபிவிருந்திதயை அருள்வாயாக! என பிராத்திக்க அங்கிருந்து நஜ்வாசிகளில் ஒருவர் இறைத்தூதரே, எங்களது நிஜத்துக்கும் என்று கூற...... நபிகளார் மீண்டும் இறவைா! எங்களில் ஷாமுக்கும், யமனுக்கும் அபிவிருத்தியை அருள்புரிவாயாக! என்றார்களாம். அந்த நஜீதுவாசி மூன்று முறை நபிகளாரிடம் கேட்டபோதும் பதில் கூறாமல் இறுதியாக தம் தோழர்களைப் பார்த்து, "நஜீது தேசம்" அதிர்ச்சி தரும் சம்பவங்களும், (பித்னா) குழ்பபங்களும் உற்பத்தியாகும் ஸ்தலமாகும். இங்கு இருந்து சைத்தாவில் கொம்பு உதயமாகும் என தமது விரலை நஜீது தேசத்தில் (பக்கமாக நீட்டிச் சொன்னார்கள், என்று உறத்து சிரந்தமான புகாரி[4] சான்று பகர்கின்றது. மேலும் ஓர் உறதில் சில பேர் கிழக்கு திசையிலிருந்து வெளிவருவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அவர்களது தொண்டை குழிக்குக் கீழே இறங்காது அவர்களில் ஒரு (ஜமாதி) கட்டம் முடிந்துவிட்டால் பின்னர் அங்கிருந்து உடனே மறு கட்டம் உதயம் ஆகும். இவர்களின் கடைசிக் கட்டம் தஜ்ஜாலுடன் சேர்ந்துக் கொள்ளும் தஜ்ஜால் என்பவன் தன்னை இறைவன் என்று உலகம் அழியும் போதும் கூறிக் கொள்ளும் தீயவன் ஆவான்[5], என்று அத்துரளஸ் ஸனிய்யா, சான்றிடுகிறது.

அன்னல் நபிகளார் அறிவத்த குழப்பமும், சைத்தானில் அபிபீராயத்திற்கு கட்டுப்படும் நிலை வாய்நத அக்கரீடம் நஜீது சேதச்தின் நாதியற்றுப் போன பனூ உறனிபாவில் கோத்திரத்திலிருந்து தான் (வம்சம்) உதயமாயிற்று. அந்த பூமியில் தான் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகளும் குழுப்பங்களும் உருவெடுத்தன. இதைப்பற்றி மௌலவி மஸ்வூத் ஆலிம் நத்னி, என்பவர் "முகம்மது இபீனு அப்துல் உஹாப் என்னும் நூலில் ஓரக் குறிப்பில் கூறுகிறார்.

4 புகாரி (உறத்து கிரந்த நூல்), பாகம் 2, ப. 1051

5 அத்துரருஸ் ஸனிய்யா ப. 50

நஜ்து தேசத்தில் புகழ் வாய்ந்த உருஸ்தலம் "அல்ஹாரிஸ்" என்னும் இடமாகும். அதன் தலைநகரம் ரியாதாகும். இன்று இந்த ரியத்ததால் சவூதி அரேபியாவின் தலைநகரமாய் இருக்கிறது. அல் ஹாரில் என்னும் அவ்விடத்தை "ஸயாமா மலைஸ என்றும் அழைக்கின்றனர். உண்மையில் இது ஓர் மலையடிவாரத்தில் பெயராகும். இதன் சுற்றுப் புற நிலத்தை "அனபா யமாமா" என்றழைக்கின்றனர். ஷைகுல் இஸ்லாம் (முகம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபி) இங்கு தான் "உவைனா" என்ற இடத்தில் பிறந்தார். "தர்அப்னா" என்ற இடத்தில் தான் தமது உற்பாபிய இயக்கத்தைத் தொடங்கினார். இவ்விரு இடங்களும் இங்குள்ள இலையடிவரத்தில் உள்ளன. இந்த இயக்கம் தான் இஸ்லாத்தை உடைக்கவென உறிஜ்ரி 4ம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றியது.

இந்த வஹாபியர்களின் முதல் நூல் "அத்தஹ்வதில் ஈமான்" என்பதாகும். இந்நூல் அரபியில் எழுதியது, உருதுவில் மொழி பெயர்க்கப்பட்டது. இதைத்தொகுத்தவர் இஸ்மாயில் முஹ்லபி ஆவார். இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் குருவாகவும், 3 பேர் ஆசிரியர்களாகவும இஸ்லாமிய அனைத்து இடங்களுக்கும் சென்று இஸ்லாமி மக்கள் காலங்தொண்டு செய்து வரும் பாத்திஹா, மௌலூ உத்தமநபி (ஸல்) (புகழ்மாலை) இறந்தப்பின் செய்யும் 3, 10, 20, 30, 40 வது நாள் சடங்குகள் மற்றும் வலிமார்கள் அடக்கஸ்தலத்திற்குச சென்று பிராத்தனை செய்யும் முறை ஆகியவற்றை வேரோடு அறுக்க முயற்சி செய்து இஸ்லாமிய மக்களிடையே குழுப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதில் அவர்கள் அனைவரும் தோல்வியைத்தான் கண்டனர். இவற்றின் கிளைகள் எஸ்.ஐ.எம்., நஜ்தூ, சலபி, ஜமாத்தே இஸ்லாமி, தப்லிக் ஜாமத் போன்றவை ஆகும். இன்று வெளிநாடுகளுக்குச் சென்று வரும் அனைத்து முஸ்லீம் அன்பர்களும் இஸ்லாத்தின் அடிப்படையை கூர்ந்து நோக்காமல், நஜீதியின் வழியில் செய்கின்றனர். இறைவன் அவர்களை அனைவரையும் காப்பானாக.

"பாத்திஹா" என்பது என்ன என்றால் இஸ்லாமியர்கள் ஓர் நற்பணியை மேற்கொள்ளும்போது "பாத்திஹாவும் துவாவும்" ஓதியபின் தான் தொடங்குவர். பாத்திஹா ஓதல் என்பது திருமறையான அல்குர் ஆனில் உள்ள முதல் போற்றுவாயான "அல்ஹம்து வில்லாஹ் ரம்பில்ஆலமன்" என்ற தொடங்கும் முதல் அத்தியாத்தையும் இறைமறையின் இறுதி மூன்று அத்தியாங்களையும் ஓதுவதாகும். இதனை இஸ்லாமியர்கள் கூடி அமர்ந்து பிறகு "அல்பாத்திஹா" என்று ஒருவர் ஓதுவார் அனைவரும் மேற்கூறமிய வேத வரிகளை ஓதி முடிப்பர். அதன்பின் "துவா" (அ) துஆ என்னும் இறைவேண்டலை ஒருவர் கூற மற்றவர்கள்

"ஆமீன் அனவாறே ஆகுக" என்று கூறுவர். இம்மரபு முகம்மது நபி அவர்கள் காலத்திலிருந்து இருந்து வரும் மரபாகும்.[6] இதனையே செய்யக்கூடாது என்று வஹாபியர்மாற்ற பார்க்கின்றனர். ஆனால் இவர்கள் செல்லும் இடமெல்லாம் வதைப்பட்டு தான் வருகிறார்கள்.

---

6 ம.சுதுழசீகூழ், ஆலம் நபி கதைப்பாட்டு (தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகக் சங்கம், 1989) ப. 19.

## வலியுல்லாஹ் பற்றிய ஆய்வின் முக்கியத்துவம்:

சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் ஆய்வுப் பற்றிய முக்கித்துவம் என்னவென்றால் இப்போது உள்ள நவீன காலமான, அறிவியல் முன்னேற்றம் அடைந்துள்ள இக்காலக் கட்டத்தில் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். எவ்வளவோ, அமெரிக்கா, இங்கிலாந்து என்று மக்கள் சென்று டாக்டர் படிப்பு முடித்து, பட்டம் பெற்று வந்து சிறப்பு பெயர் பெற்று விளங்கும் டாக்டர்களால் ஏன் பில்லி, சூனியம், பேய், ஆவி, பிசாசு துர்தேவதைகள் போன்ற இன்னும் பலவற்றை கண்டுபிடிக்க முடியவில்லை.

மேலும் உடம்பில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் என்று பிரித்து, படித்த டாக்டர்கள் ஸ்கேன் கொண்டு வயிற்றிலிருக்கும் குழந்தை ஆனா, பெண்ணா என்பதைக் கூறும் இவர்கள் ஏன் வயிற்றில் இருக்கும் செய்வினையால் செய்த ஊசிகள், குத்தப்பட்ட எலுமிச்சைப்பழம், கண்ணாடி முடி, ஆணி, மாவு பொம்மை போன்ற பொருட்களை காண முடியவில்லை. அதற்குண்டான நிவர்த்தியும் செய்ய முடியவில்லை. காரணம் அவர்கள் நம்புவதுமில்லை. தீய சக்திகளால் செய்யப்பட்ட பொருட்களை அவர்கள் கண்களுக்கு புலப்படுவதுமில்லை.

எனவே தான் இறைவன் தான் நாடிய தன்னுடைய அடியார்களில் ஒரு சிலருக்கே இந்த மாபெரும் சக்தியை தந்துள்ளான். அவர்கள தான் இறைநேசத் செல்வர்கள் என அழைக்கப்படுகின்றவர். எடுத்துக்காட்டாக, நாகூர், முத்துப்பேட்டை, பாப்பாவூர், திருச்சி, தப்ரேஆலம், பாதுஹா, ஏர்வாடி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள தர்க்ஹாக்களில் டாக்டர்களினால் முடியாத மேற்சொன்ன செயல்கள் நடந்து இருக்கின்றன, நடக்கின்றன.

இந்த மாதிரி இடங்களில் உள்ள இறை நேசர்களில் ஸ்தலங்களுக்கு பெண்கள், ஆண்கள், குழந்தைகள், பெரியோர், சிறியோர் மற்றும சாதி, சமய இன வேறுபாடின்றி

அனைவரும் செல்லலாம். பயன் அடையலாம். அனைத்து தரப்பு மக்களும் மேற்கூறியவாறே அனைத்து தர்ஹாவிற்கும் சென்று பயன் பெறுகினறனர். இறை நேசச் செல்வர்கள் அனைவரும் மக்களுக்காக இறைவனால் படைக்கப்படவர்கள். இவர்கள் அனைவரும் இறைவனின் ஆணைப்படி மக்கள் அனைவருக்கும உதவி செய்கின்றனர்.

மேற்கூறிய அனைத்தும் உண்மையாக தர்காவில நடைப்பெறுகின்றன. வஹாபியோ அல்லது இவ்வியக்கத்தில் கிளைகளோ மக்களை திசைத்திருப்பி துடியாது. அவ்வாறு செய்ய நினைத்தால் அவர்கள இறுதியில் மக்களால் கல்லால் அடிப்பட்டு, உதைப்பட்டுத்தான் போனார்கள், இதுப்போன்று நடந்தும் உள்ளது. இந்த நஜாதிகளைப் பற்றி தெரிந்து நான் தெளிந்துவிட்டேன். அல்லாஹ்வின் படைப்பிலேயே மிகத் துறந்தப் படைப்பு மனித படைப்பே, எனவே நம் அனைவரையும் இறைவன் இந்த இழிக்கெட்டக் கட்டமான வஹாபிகளிலிருந்து பாதுகாத்து உதவி செய்வானாக என்றுக் கூறி எனது முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

## சிறு குறிப்புகள்

காதிரிய்யா, ஷித்தாரியா, நக்ஷ்பந்தியா, அஹ்ரவதியா, சிக்ஷதியா என்ற ஐந்தும் ஞானப் பாட்டைகள் எனப்படும். இவைகளை இஸ்லாத்தின் மேன்மைக்காக அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைவதற்கு தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆன்மீக வழிக்கு "தர்கா" என்று பெயர்.

இந்த தர்காகாரர்கள் பெருமானாருக்கு பிடித்தமான ப்சசைத் தலைப்பாகையும், இவர் தன் பணிவை தெரிவிக்கும் வகையில் மன் நிறமான காவியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

பை அத் னென்பது தீட்சைப் பெறுவது கிலாபத் என்பது சீடர் ஆவது. கலிபா என்ற பதவி – பிரதிநிதியாகும். குரு பதவியாகும்.

முர்த் என்பது ஓர் உறசீரத்தை மானசீகமாக நம்பி அவர்களை ஏற்றுக் கொண்டு தீட்சைப் பெறுவது ஆகும். (மற்றும் சீடராக, மாணவராக ஆவது).

கிலாபத் என்பது சீடரை குருவாக அங்கீகாரம் அளிப்பது.

கத்தஸ சிர்ரஹ் என்பது, அவர்கள் படித்ரத்தை புனிதமாக்கிளைப்பபானாக.

ரஹ்மத் துல்லாஹ் என்பது அல்லஹ் அவர்கள் மீது தன்னுடைய அருளை கிருபையை (ரஹ்மத்தை) பொழிவானாக!

ரலியல்லாஹ் அலஹ் என்பதற்கு அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான். மேற்கூறிய குறிப்புகள் இந்த ஆய்வில் பயன்படுத்தப் பட்டுள்ளதால் இதை தெரிந்துக் கொள்வது அவிசியமாகும்.

# அத்தியாயம் – 1

## சாஹெப் வலிய்லலாஹ் இளமையும், கல்வியும்

உறஸரத் ஷையத் உஷா சிராஜித்தின் முகம்மது சக்காபீ காதிரி என்கிற சாஹெப் வலியுல்லாஉற் அவர்களைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்:

இஸ்லாமியரின் திருமறையான அல்குரிஆன், உறதில் திரதங்கள் இவை இறை நேசச் செல்வர்களைப் பற்றி முதன்மை ஆதாரங்கள் மற்றும் உறரைத் சையத் உஷா கிராஜீத்தின் முஹம்மது சக்காபீ காதிரி எழுதிய சிறு நூல்கள் போன்றவை ஆகும் மற்றும் சாஹெப் வலியுல்லாஹ் தாமே த்ம கைப்பட எழுதிய குறிப்புகள் ஆகியவைகளும் அடங்கும்.

**வம்சா வழி:**

சோழவள நாட்டின் தலைநகரான தஞ்சாவூர் வழிமார்கள் அருளாசியினால் வளம்பெற்றுத் திகழும் நகரமாகும். நாகூர் ஷாஹீல் ஹமீது நாயகம் அவாக்ள தஞ்சைக்கு வந்து சென்று வரலாறு சாதி, மத வேறுபாடின்றி அனைத்துதர மக்களும் அறிந்த ஒன்று, இங்குள்ள மன்சூர் ஷா காதிரி வலியுல்லாஉற் அவர்களின் தர்ஹாவில் நாகூர் ஆண்டகை அவர்கள் தங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மன்சூர் ஷா, காதிரி, இரட்டை மஸ்தான் பீரி முகம்மது ஷா காதிரி, சூஃபி, ஷா காதிரி, சையது அலி பாதுஷா ஆகிய வலிமார்கள் தஞ்சைப் பகுதியில் உறைந்து வருகின்றனர். இரட்டை மஸ்தான் தர்ஹா நகரில் நடுநாயகமான பகுதியில் தஞ்சாவூர் புது ஆற்றில் வடது புறத்தில், கனி மருத்துவமனையில்ன முன்புறம் அமைந்திருக்கிறார்கள். தந்தையும், புதல்வருமான இருவலிமார்கள் இங்கு அடங்கியிருப்பதால் இரட்டை மஸ்தாவி தர்ஹா என அழைக்கப்படுகிறது. தந்தை பெயர் ஹஜ்ரத் சையது ஷா கோஸ்த் முகம்மது சக்காப் தாஜீம், தரக் காதிரி புதல்வர் ஹஜீரத் சையது ஷா நிஷமத்துல்லாஹ் சங்காப் பாஜீம்தரக் காதிரி ஆவர்.

இவர்களின் வழித்தோன்றலான சையது இஸ்மத் பாஷா சக்கபாப் அவர்களும் குடும்பத்தினரும் இந்த தர்ஹாவை நிர்விக்கின்றனர். (இப்போது சாஹெப் சகோதரர் நிர்வகிக்கிறார்கள்) இரட்டை மஸ்தான் தர்கா கட்டப்பட்டு ஆண்டு 1000. இந்த இரட்டை மஸ்தான் தர்காவில் பல அற்புதங்கள் நடக்கின்றன. இந்த இறைநேசரின் தர்ஹாவானது சிறந்து விளங்குகிறது. இவர்கள் சக்காப் பர்மபரையைச் சேர்ந்தவர்கள்.

சக்காப் பர்மபரையை சேர்ந்த ஜாபர் சக்காப் என்னும் பெருமகன் பஜப்பூர் சுல்தான் அதில்ஷாவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார்கள். சுல்தான் அதில்ஷா மஹீமுத் அவர்களை வரவேற்று மரியாதைச் செய்தார். ஹ்ஜ்ரி 1058ஃ7–ம் ஆண்டு துல்காயிதா மாதம் இவர்கள் காலமானார்கள். பீஜப்பீர் மைனலவி பசிருத்தின் அஹமது தெஹ்லவி கோர்வை செய்த நூலில் இவர்களைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

இத்தகைய சிறப்புக்குரிய பரம்பரையில் வந்த சையது ஷா ஜாபர் சக்காப் அவர்களின் பேரன் சையது முகம்மது சக்காப் அவர்களே முதன் முதலில் தஞ்சாவூருக்கு வந்தார்கள். அப்போது தஞ்சையில் பெயர் காதர் நகர் என்பதாகும். பிஜப்பூரை அப்போது ஆண்டு வந்த சுல்தான் சிக்கந்தர் ஜானி தஞ்சை அரண்மனையில் ஏற்பட்டிருந்த ஆட்சிக் குழப்பத்தைச் கரி செய்வதற்காக அப்துல் அலீம் என்பவரையும் யக்கோஜி என்ற மராட்டியரையும் தஞ்சைக்கு அனுப்பி வைத்தார். அப்துல் உறலீம் தமது குரவாகிய சையது முகம்மது சக்கப் அவர்களையும் அவர்களின் குடுமத்பத்தினரையும் தஞ்சாவூருக்கு அழைத்து வந்தார்கள்.

தஞ்சை அரண்மனையில் குழப்பம் தீரவில்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்க அங்கு இருந்தவர்களில் யாருக்கும் தகுதி இல்லை என தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் பீஜ்பபூர் சுல்தான் எக்கோசீயை அரசராகவும், அப்துல் ஹல்ம் அவர்களை அமைச்சராகவும் பொறுப்பேற்க ஆணையிட்டார் என்று கூறப்படுகிறது. குரு சையது முகம்மது சங்காப் அவர்கள் இற்ஜ்ரி 1169ம் ஆண்டிற்கு முன்பே மறைந்துவிட்டார்கள் என்று தெரிகிறது. மராட்டியம ன்னரான யக்கோஜி அவர்களால் இனாமாக அளிக்கப்பட்ட இடமே தர்ஹாவாகும். இந்த தர்காவை சுற்றியுள்ள இடங்களும் மன்னரால் மானியமாக சக்காபீ குடும்பத்திற்கு அளிக்கப்பட்டதாகும்.

தஞ்சையில் இப்போது புதியதாக கட்டப்பட்டுள்ள தற்காவில் நடக்கும் அற்புதங்கள் நடத்தி மக்களை கஷ்டங்களிலிருந்து காப்பாற்றும் பெருமாஹானான சாஹப் அவர்கள் மேற்கூறிய பரம்பரையில் சேர்ந்தவர் ஆவார்.

வம்சாவரீ முறைப்படி நபிகள் நாயகம் ஸல்லல்லாஉற் அவைஹி அவர்களின் பரம்பரையில் சாஹெப் அவர்கள் 37ம் வழித் தோன்றலான அனைவராலாலும் அன்புடனும், கண்ணியத்துடனும், மரியாதையுடனும் சாஹெப் என அழைக்கப்படும் ஹஜ்ரத் சையத் ஷா சிராஜீத்தீன் முகம்மத் சக்காப் தஃஜிரம் தரக் காதிரி ஷித்தாரி நக்ஷபந்தி என்கிற சையத் ஷா இஸ்மத் பாஷா சக்காப் சாஹெப் ஆவார்கள். இவர்கள் அல்லாஹவின் அருளும், ரசூலின் ரஹிமத்தும், அல்லியாக்களின் வஸிலத்தையும் பெற்ற வலிதான் என்பதை சாஹெப் அவர்களின் இன்றைய தர்ஹா பறைசாற்றிக் கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட மஹானின் வாழ்க்கை வரலாறும், நிகழ்திய கராமத்துக்களும் (அற்புதங்கள்) முர்தீன்களின் (சீடர்கள்) நேரடி அனுபவங்களும் நாம் பின்வருமாறு விளக்குமாக அறிந்துக் கொள்ளலாம். சாஹெப் அவர்களின் வாழ்க்கையில் இவ்வுலகில் வாழ்ந்த போதும் இறையடி சேர்ந்த பின்னும் நிகழ்த்திய நிகழ்ந்து கொண்டு இருக்கும் அற்புதங்களைப் பற்றியே ஆய்வே இக்கட்டுரையாகும்.

**தோற்றம்:**

சாஹெப் என அனைவராலும் கண்ணியத்துடனும், மரியதையுடனும் அழைக்கப்படும் சையத்ஷா சிராஜித்தீன் முகம்மது சக்காப் தாஃஜீம்காதிரி ஷித்தாரி (நக்ஷீபந்தி) என்கிற சையத்ஷா இஸ்மத் பாஷா சக்காப் சாஹெப் பலியுல்லா (ரஹ்மத்துல்லாஹ் அலைஹி) ஹஜ்ரி 1324ம் வருடம் ரஜபுல் முரஜ்ஜப் மாதம் பிறை 2 வெள்ளிக்கிழமை சரியாக ஆங்கில ஆண்டு 7.2.1924 அன்று தஞ்சை சக்காப் சாஹெப் மக்காவில் (தைக்காலில்) ஹஜீரத் சையத் ஷா ஹசனுல் முசன்னா சக்காப் என்கிற சி.எஸ்.பிரான் சாஹெப் ஹைதராபாத் அவர்களுக்கும், மகமூதுனிசா பீபி சாஹெபா ஹைதராபாத் அபர்களுக்கும் மூத்த புதல்வராக பிறந்ததார்கள். இவர்களது இளைய சகோதரர் ஹஜீரத் சையத் சிராஜீத்தின் அஹமத் சக்காப் சாஹெப் என்கிற சையத் அஹமத் பாஷா சக்காப் ஆவார்கள்.

சாஹெப் வலியுல்லாஹ் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழித் தோன்றலில் 37வது தலைமுறையைச் சார்ந்தவர்கள் குருப் பரம்பரையில் இவர்கள் 4வது வம்சா வழியை (பாட்டி வழி) சேர்ந்தவர்கள்.

**சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் வளர்ப்புத் தாயரைப் பற்றிய சிறு குறிப்பு:**

சேலம் பீ என்று அன்றும் இன்றும அனைவராலும் போற்றப்பட்டு, புகழப்பட்டு வருபவர் ஷம்சுன்னிசா பேகம் பீபீ சாஹெபா அவர்கள் ஆவார்கள். இவர்களும் இவர்களது கணவருமான கிள்ளை ஜாகிர்தாரதான சையத் அஹமத் சக்காப் அவர்களும் தங்களுக்கு பிறந்த குழந்தை இறந்ததன் காரணமாக சாஹெபை தத்து பிள்ளயைாக ஏற்று வளர்த்தனர். இவர்கள் சாஹெப் அவர்களுக்கு பெரிய தந்தையும் பெரியம்மாவும் உறவு முறையில் ஆவார்கள். சேலம் பீ என்று அனைவராலும் இவர் அழைக்கப்பட காரணம் சேலத்தைச் சேர்ந்தவர் அனைவரிடமும் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும், மரியாதையுடனும், மதிப்புடனும் நடந்துக் கொள்வார்கள். தமது 30 வயதில் தமது கணவரை இழந்தார். இவர்கள் செல்வம், வசதியும் உடையவராக இருந்த போதிலும் ஏழ்மையான வாழ்க்கையை மேற்கொண்டனர். இவர் அல்லாஹ்வின் பால் அதிக நாட்டங்கொண்டு எப்போது தவம் செய்து வண்ணமே இருப்பார்கள். சிம்னி விளக்கும், கூரைவேய்ந்த வீட்டிலும் தான் இவர்கள் இருந்து இருக்கிறார்கள்.

இவர்கள் இறக்கும் தருவாயில் "வாயிலாஹா" என்று அல்லாஹவின் பெயரை தியானம் செய்துக் கொண்டே இருந்து இருக்கீனறார். அப்போது அவர்களின் வலது கண்ணிலிருந்து நட்சத்திரம் மற்றும் அல்லாஹ்வின் நூர் (நூர் என்பது ஒளி) புறப்பட்டு வெளி வந்துக் கொண்டே இருக்கிறது. இதை சாஹெப் அவர்களின் குடும்பத்தினர் மட்டுமில்லாமல் வீட்டின் வேலை செய்யும் ஆட்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் கண் கூடாக கண்டு இருக்கின்றனர். இத்தாயாரின் சிறப்பு என்னவென்றால் இப்போதும் சாஹெப் தர்ஹாவில் அங்கு வரும் மக்களுக்கு சிகிச்சை அளிக்கின்றார். பேய், பிசாசு, ஜீன் போன்ற பல தீய சக்திகளையும் அடக்கும் ஆற்றலை அல்லாஹ் இவர்களுக்கு தந்து அருளி உள்ளான். இவர்களின் அட்க்கங்தலம் சாஹெப் இவர்களுக்கு தந்து அருளி உள்ளான். இவர்களின் அடக்கங்தலம் சாஹெப் அவர்களின் வலது பக்கத்தில் உள்ளது. மேற்கூறிய நிகிழ்ச்சிகளை சாஹெப் அவர்களின் துணைவியார் சாஜிதுன்னிசா பீவி அவர்கள் சொன்னவையாகும்.

**சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் இளமையும் கல்வியும்:**

சிறு வயதிலேயே தாயாரை இழந்த சாஹெப் அவர்கள் பிஸ்மில்லா கானி என்னும் மக்தப் துவக்கக் கல்வியை தமது பெரிய தந்தையாகும் கிள்ளையின் சஜீதா நிஷீனாகப் பொறுப்பேற்றிருந்த சமயத்தில் தமது இன்னுயிரை முகர்ரம் பிறை2 உறிஜ்ரி 1342ம் ஆண்டு அதற்குச் சரியான 19,6,1927ல் ஞாயிற்றுக்கிழமை ஷவறி தாக்கப்பட்ட ஹஜ்ரத் சையத் ஷா அகமத் சக்காப் தஹ்ஜிம் தரக் காதிரி ஷித்தாரி என்கிற சாஹெப் பீரான் சாஹெப் அவர்களிடம் ஓதினார்கள்.

தமது இளமைக் கல்வியை வேலூர் லத்தீபியாவிலும். பாக்கியத்துஸ் ஸாலிகாத்திலும் பயின்றார்கள். பின் மேற்கல்விக்காக வட இந்தியாவிற்குச் சென்று யுனானி வைத்திய முறைகளை கற்றுத் தேர்ந்தார்கள்.

இளம் பிராயம் கொண்டே இறையச்சமும் நபிகளாரின் மீது நேசமும், வலிமார்களின் பால் முஹப்பத்தும் (அன்பும்) கொண்டவர்களாய் இருந்ததார்கள். தமது 9வது வயதில் ஹஜீரத் மக்கான் லத்திபியா அரப்பிக் கல்லூரி வேலூரில் ஓதிக் கொண்டிருக்கும் போது ஓர் இரவு கனவில் நாயகம் (ஸல்) அலைஹி வஸல்லம் அவர்களது திருக்கபாட்சி கிட்டியதாக சாஹெப் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி உள்ளார்கள்.

இத்திருக்காட்சியைத் தொடர்ந்து, இறை நேசத்தை நாடியவர்களாக வட இந்திய மலை வனாந்திரங்களில் அற்றித் திரியலானார்கள். அந்த சமயத்தில் இக்கள் பலர் சாஹெபை துவா செய்யக் கூறியும் தமது இல்லங்களில் தங்கவும் தாயத் வழங்கக் கோரியும் வேண்டியவர்களாய் இருந்ததார்கள். "எனக்கு தனிமையே நோக்கமாதலால் நான் அவர்களிடமிருந்து விடுபட்டு என் குறிக்கோளை நாடிச் செல்லலானேன்" என்று சாஹெப் நவின்று உள்ளார்கள்.

"எந்த எலியின் மீது ஜனங்கள் வெறுப்பும் துவேஷமும் கொண்டிருக்கின்றனரோ, அந்த வலியானவர் அவர்கள் மத்தியில் மாசற்றும், அவர்களது உள்ளத்தில் உள்ள வெறுப்பும் துவேசமும் மாயமாய் மறைந்துப் போயட அந்த வலியின் மீது என்ற அளவு அன்பு கொண்டு விடுகின்றனர் என்றால் அவவிலியின் கையையும், காலையும் முத்தமி துவங்கிவிடுகின்றனர் என்று உறிஜ்ஜத்துல்லாஹ என்றும் நூலில் பறைசாற்றப்படுகிறது.[1]

---

1 நறிஜ்ஜத்துல்லாஹ் பாகம் 2, ப. 857.

மேற்கூறிய மொரீயில் படிதான் இப்போது மக்கள் அனைவரும் சாஹெப் அவர்களின் தர்கா ஷெரீப் சென்று முத்தமிடுகின்றனர். வகாபி இயக்கம், தப்லிக் இயக்கம் போன்ற கட்டங்களில் உள்ள மக்களும் மனம் மாறி சாஹெபின் காலடியை மெய்மறந்து முத்தமிடுகின்றனர்.

சாஹெப் அவர்கள் இளம் பிராயம் போதே தம்மிடம் மக்கள் மேற்கூறியவாறு நடந்துக் கொண்டதை தாமே தம் வாய் மலர்ந்தருளி உள்ளார்கள். எனக்கு சிறுவயதிலிருந்ததே காடு, மலைகளை சுற்றிப்பார்க்க ஆசையிருந்தது. இரவு பகல் பாராமல் கால்நடையாக நடக்க ஆரம்பித்துவிடுவேன். பல நாட்கள் நடந்துக் கொண்டே இருப்பேன். இடையில் உள்ள ஊர் மக்கள் என்னிடம் மன்றாடி தன் வீட்டில் வந்தால் எங்களுக்கு பரக்கத் உண்டாகும் எனச் சொல்லி இளம் பருவத்திலேயே கால்களைத் தொட்டு வணங்குவார்கள் என்னிடம் தாவிஜ் (தாயத்து) கேட்பார்கள். இவை எல்லாம் எனக்கு ஆச்சிரியமாக இருக்கும்.

படிக்கும்போது கட்டம் உள்ள மசூதியில் போக மாட்டேன் உடைந்துப் போன பழைய மசூதியில் உட்கார்ந்து துவா செய்தேன்.

மத்ரசாலில் ஓதும்போது (சிறு வயதில்) ஓர் கனவு கண்டேன். "நபி நாயகம் அவர்கள் கையில் ஓர் வாள் கொடுத்து பேய்களும், ஜீன்களும், துர்தேவதைகளும், ஆவிகளும் நிற்கும் பக்கம் தன் திருக்கரங்களை நீட்டி அவர்களை வெட்டும்படி எனக்கு இஷாரா (செய்கை) செய்தார்கள். நான் தொடர்ந்து செய்து வருகிறேன்.

நான் வெயிலில் நின்றும், தண்ணீரில் நடந்தும் சாதனை புரிந்து உள்ளேன். ஆசார் ஷரியிலும் உப்பில்லா கஞ்சியுடன் 40 நாள் சில்லா (தவம்) இருந்திருக்கிறேன். இதுபோல் பலமுறை பல இடங்களில் செய்துள்ளேன்.

என்னுடைய வாலிப பருவத்தில் நான் தெருக்களில் போகும்போது, என் அக்கம் பக்கத்தில் நடப்பவர்கள் மயக்கம் போட்டு விழுந்து விடுவார்கள். எனக்கு இந்த நிகழ்ச்சி மனக் கஷ்டத்தைக் கொடுக்கும். அவர்கள் மேல் உள்ள ஷைத்தானை என்னால் பிடிக்க முடியும். ஆனால் அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இதனால் நான் கட்டங்களுக்கு திருமணங்களுக்குச் செல்வதையே நிறுத்திக் கொண்டேன். ஏனெனில் என்னிடம் அவ்வளவு ஜாலாலியத் (சக்தி) இருந்தது இவ்வாறாக நவின்றுள்ளார்கள்.

**சாஹெபின் பை அத்தும் இலாபத்தும்:**

பை அத் என்பது தீட்சைப் பெறுவது மற்றும் சீடராக அல்லது மாணவராக ஆவது. கிஸாபத் என்பது சீடரை குருவாக அங்கீகாரம் அளிப்பது அல்லது கலிபா என்ற பிரதிநிதி பதவி கொடுப்பது அல்லது குருவாக ஏற்று குருப்பதவு கொடுப்பதாகும்.

இறைவனை நாடிச் செல்பவர்களை இறைவனே நேசித்து தன்பால் அடைய ஷேக்மார்களின் பை அத்தைக் கொண்டு வழியை காட்டுகின்றான், என்பதற்கு ஒப்ப ஜீல் காயிதா பிறை உறிஜ்ரி 1357ம் ஆண்டு (சரியாக 3.1.1939) வம்சா வழி முறைப்படி நமது தந்தையாரிடம காதிரியா தர்க்காவில் பை அத்தும் கிலாபத்தும் பெற்றார்கள்.

பிற்காலத்தில் ஷித்தாரியா தர்க்காவின் பால ஈடுபாடுக் கொண்ட சாஹெப் அவர்கள் அதனை அயை வேண்டி ஈச்சம்பட்டியைச சார்ந்த உறஜீரத் சையத் ஷா காதிரி ஷித்தாரி என்கிற சாப்ஜி சாஹெப் என்னும் ஷேக் அவர்களிடம் ஷித்தாரியா தர்க்காவில் பை அத்தும், ஜிலாபத்தும் பெற்றார்கள்.

பிறை 6 ஏஜப் மாதம், உறிஜ்ரி 1392ம் ஆண்டு (16.81 1972ல்) மேற்கண்ட ஷித்தாரியா, தர்காவின் பால் மிகுந்த ஈடுபாடு கொண்ட சாஹெப் அவர்கள் அந்த ஷித்தாரியா, தர்காவின் மூலமும், அதைப்பற்றியக் குறிப்புகளும் தமது ஷேக்கின் ஹஜீரரவையும் உருதுலில் தம் கைப்பட எழுதி உள்ளதை இங்கு மொழி பெயர்த்த கொடுக்கப்பட்டுள்ளது.

**ஷித்தாரியா காவ்வாதாவில் மூலம் ஓர் ஆய்வு:**

ஷித்தாரியா காவ்வாதா என்பது பிரீதௌசியா கான்வாதாவின் ஆறாவது கிளையாகும். இந்த பிர்தௌசியா காவ்வாதா ஷேதக் நஜீமுத்தின் குபீரா அவர்களின் பால் தொடப்கிறது. இவர் தனி ஷேகர் வஜிஉறித்தின் வலியுல்லாஉற் அவர்களின் வழிகாட்டுதலின்படி அபு நஜீப் சுஹரவாதி அவர்களிடம் பை அத்தும் கிலரப்பத்தும் பெற்றார்கள். இதன் பின் ஷேக் அவர்கள்

தம் முரிதை பார்த்து " நீங்கள் பிர்தௌசின் ஊேதக்காக இருக்கிறீர்கள்" என மொழிந்தார்கள். அற்றிலிருந்த பிர்தௌசியா கான்வாதா உருவானது.

ஷித்தாரியா காவ்வாதா ஹஜ்ரத் அப்துல்லா உதித்தார் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டன. இவர்கள் ஷேக் முகம்மது ஆரிப் அவர்களின் கலிபா ஆவார்கள். இந்த அப்துல்லா உதித்தார் அவர்கள் ஷேக் ஷீஹரபுத்தின் அஉறரவர்தி அவர்களின் சந்ததியினர். இந்த தலைமுறைப்படி அவர்களின் சில் சிலா பிர்தௌசியின் மூவாரன தஜ்முதீன் குப்ராவை சென்றடைகிறது.

'மிர்ரதுல் அஸ்ரார்" என்ற கிரந்தத்தில் ஷித்தார் என்ற பட்டத்தை கையூரியா கட்டத்தில் முதல் முதலாகப் பெற்றவாஹஜ்ரத் ஷேக் அப்துல்லா உதித்தார் அவர்கள்.

அகராதியில் ஷித்தார் என்ற பதத்திற்கு விரைந்து நடப்பவர் என்றும், ஞானவாக்களான குபியாக்கிடத்தில் "இல்–முல்உதித்தார்" என்பது அல்லாஉறீவை அடையும் ஒரு தரீகத் முறையாகும். இந்தச் செயல் முறையால் ஞானப்பரீட்டையில் செல்பவர் "பானாகில்லாஉற்" பகா பில்லாஉற்" என்ற அந்தஸ்தை அடைகிறார்.

ஷேக் அப்துல்லா அவர்கள் இந்த ஞானப்பாட்டையில் விரைவாக முன்னேறியதால் இவர்களின் ஷேக்கான முகம்மது ஆரீப் அவர்கள் உதித்தார் என்ற பட்டத்தை வழங்கினார்கள். தம் சில்சிவாவின் பெயராக் வைத்துக் கொண்டார்கள். இவர்களின் மூலம் இந்த சில்சிலா உண்டாகிப் பரவியது. ஹஜ்ரத் அவர்களின் கப்ரு உதரிப் வட இந்தியாவில் மண்டு கோட்டையில் உள்ளது.

ஷேக்குடன் உதத்தாரி அவர்கள் இந்த பரம்பரையில் சுல்தான் சிக்கந்தர் காலத்தில் புகழ் பெற்றவராக விளங்கினார்கள். மகான் ஊேதக் முகம்மது கௌஸ் குவாலியாக அவர்கள் இந்த தரிகாவின் புகழ் பெற்ற கலீபாவாக விளங்கினார்கள். இவர்களைக் கொண்டுத்தான் இந்தியாவில் உதித்தாரியா சில்சிலா பாரவியது. (தமிழகத்தில் மேன்மைமிகு மகனாவான உதாகுல் அறமீது (கல்ஜே சிலாயி நூ கர்) நாயகம் அவர்கள் ஹஜ்ரத் அவர்கள் கல்பா ஆவார்கள்.

இந்த தர்காவில் மூவர்களும் ஒருவர் ஷேக் முகம்மது குதாகுலி மாவரா வன்னெரி ஆவார்கள். "ஜலாஹிரே கமீஸா" என்கிற வஜிபா தொகுப்பு முகம்மது கௌஸ் குவாலியரி அவர்களுடையது. "துவாயே ஸைஃபிஸ் என்பதும் இந்த தரிக்காவை சார்ந்த "விர்தாகும்".

இந்த தர்க்கா அபாயெஜித் புஸ்தாமி அவர்களின் ஞான பாட்டை வாரியாக சைய்யதினா இமாம் ஜபார் சாதிக் அவர்களை சென்றடைகிறது. அபுல் உறச்ன சிர்கானி என்ற பெரும் நாதாவும் இந்த தர்கத்தைச் சார்ந்தவரே. (இஸ்லாத்தின் மேன்மையாக அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைவதற்காக தேர்தெடுத்துக் கொண்ட ஆன்மீக வழிக்கு "தர்கா" எனப்பெயர்).

**சாஹேபின் கல்வி ஞானம்:**

நமது சாஹப் அவர்கள் அரபி பார்சி உருது, தமிழ் மற்றும் ஆங்கிலம் என்று தமக்குத் தெரிந்த மொழி புத்தகங்களை மிக, மிக சிறந்த கருத்துக்களை கண்ணுறுவதில் ஆசையும் ஆர்வமும் கொண்டவர்களாக இருந்தார்கள். தமக்கு ஓய்வு கிடைக்கும் நேரமெல்லாம் சூபியாக்களில் ஞானவான்களின் ஞானவான்களின் புத்தக்ங்களை கற்றுத் தேர்ந்து இருந்ததார்கள். காணக்கிடைக்காததும், அரியதுமான பற்பலஅரபி, பாரசீக கையெழுத்து பிரதிகள் அவர் தம் நூல் நிலையத்தில் இன்றும் இருப்பதை பார்க்கலாம். இவைகளைக் தவிர கிடைக்கப்பெறாத அரிய புத்தகங்களின் நகல்களை ஜெராக்ஸ் பிரிதிகளாக எடுத்து பராமரித்து வந்துள்ளார்கள்.

சாஹப் அவர்களின் கையெழுத்து வடிவமும், அழகும் பற்றிறக் கூறிட வார்த்தைகள் ஏதும் இல்லை. ஒவ்வொரு எழுத்தும் உயிரோட்டம் கொண்டு காண்பவரோடு உறையாடும் வகையில் மனதில் பதிய வைக்கும்.

சாஹெப் அவர்களின் நினைவாற்றல் மிகவும் போற்றுதற்குரியதாகும். சாஹெப் பற்பல நூல்கள் மாத, வார இதழ்க்ள மற்றும் தினசரி ஏடுகள் இவற்றை கண்ணுருபவராக இருந்தாலும், ஏதேனும் ஓர் கருத்து விசயத்தில் ஆதாரமும், விளக்கமும் தேவைப்பட்டால் நூலின் பெயர் அது தமது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள இடம், பக்கம், பத்தி, வரி ஆகிய அனைத்தும் கூட தவறாமல் எடுத்துக்காட்டுவார்கள் என சாஹெப் குடும்பத்ததார்களும், அவர்களிடம் நெருங்கி பழகியவர்களும் கூறுகிறார்கள்.

## சாஹெப் அவர்களின் உருவத் தோற்றம்:

அமைதியானத் தோற்றம், அகன்ற நெற்றி ஒளி வீசும் கண்கள், புன்னகை தவழும் உதடுகள், சாந்தம் நிலவும் தேஜன் கொண்ட முகத்தை உடையவர்களாகக் இருந்தார்கள். மத, இன, மொழி வேறுபாடு இன்றியும் ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் வராமல் அன்னவரிடத்திலும் சிரித்த முகத்தோடு பழுகுவார்கள். சாஹெபின் கவலைகளை சுமந்து வருபவர்கள் சாந்தம தரும், ஆறுதல் கூடிய சாஹெபின் பேச்சாலும் தெளிந்த ஆலோசனைகளாலும், மகிழ்ச்சியோடு திருப்தியுற்று செல்வார்கள் என்றும் அனைவரும் புகழ்கின்றனர்.

## சாஹெபின் நடை உடைபாவனைகள்:

சாஹெப் அவர்கள் மிக எளிமையான தோற்றத்துடன் விளங்கினர். சாதாரண கைலியும், ஜிப்பாவும், கையால் தைக்கப்பட்ட தொப்பியும் ஒரு காவித் துண்டும கொண்டு எளிய உடையில் காட்சி அளிப்பார்கள். படாடோபமோ, ஆட்பரமோ, விளம்பரமோ ஒரு போதும் அவர்கள் விரும்பியதில்லை. எல்லோரிடமும், சர்வ சாதாரணமாக அளவான பேச்சு, கருணையான பார்வை, கவலைகளையும் கஷ்டங்களையும் சுமந்து வருவோர் தம் நிலைமைகளை எடுத்துக் கூறும்போது அதனை அமைதியாக கேட்டு பதிலாக சாஹெபிடமிருந்து வரும் ஆறுதல் தரும் வார்ததைகள் இதயங்களுக்கு இதமளித்தது என்பதால் மக்கள் மனம் குளிர்ந்து திரும்புவார்கள் என்றும் அனுபவப்பட்டவர்களும் அருகில் இருந்து பார்த்தவர்களும், நெருங்கிப் பழகியவர்களும் மேற்கூறியவாறு கூறுகின்றனர்.

## சாஹெப் அவர்களின் இல்லற வாழ்க்கை:

புலிமான் குளம் இருந்த உறவு முறையில் சிறிய தாயாரின் மகளான சாஜிதுன்னிசா பீவி சாஹெபா அவர்களை 1946 ஆம் ஆண்டு நிக்காஹ் (திருமணம்) செய்துக் இல்லற துணைவியாக்கினார்களா. பீ சாஹெபா சாஹெபின் வாழ்நாள் முழுவதும் அவர்களது மகத்துவத்தை அறிந்து மனம் கோணாமல் நற்றணயாக இருந்து சேவை செய்ததுடன் நாடி வரும் உற்றார். உறவினருக்கும், முரிதீன்களுக்கும், விருந்தினர்களுக்கும் விருந்தோம்பல் செய்து மற்றோருக்கு ஓர் எடுத்துக் காட்டாக நல்ல மனையாளாகத் திகழ்ந்தார்கள்.

## சாஹெப் அவர்களின் குடும்பம்:

சாஹெப் அவர்களது குடும்பத்தில் மூன்று ஆண் மக்கள், இரண்டு பெண்கள் அவர்கள் அவர்களில் முதலாமவரான சையது ஷா ஷபீக்குல் அமீன் சக்காப் உடல் ஊனத்தார் பாதிக்கப்பட்டவர்கள். இரண்டாமவர் சையத் ஷா மூசா சக்காப் தஃஜிம் தரக் காதிரி ஷித்தாரி "உறிந்து" ஆங்கில தினசரியில் ஸ்டாப் கரர்பாண்டுடவிடாக திருநெல்வேலியில் பணியாற்றி வருகிறார். சாஹெப் அவர்களால் இலாபத் கொடுக்கப்பட்டு பெரிய கலிபாவாக விளங்குகிறார்கள். மூன்றாமவர் சையத் அப்துல் ரதூல் தாஃஜிம்தரக் காதிரி ஷித்தாரி என்கிற சையத் வஜ்ஹின் நஃகி சக்காபி. வேலூர் லத்திபியா மதரஸாவில் ஓதி மௌலவி பட்டம் பெற்று இரண்டாம் கல்பாவாக சாஹெப் அவர்களால் கஇலாபத் கொடுக்கப் பெற்றார்கள். இவர்கள், இவர்களது சிறிய தாயாரின் புதல்வி நுஸரத்துடன்னிஸா பீ அவர்களுடன் திருமனம் செய்துக் கொடுக்கப் பெற்றார்கள்.

முதல் மகளாரனை ஆபியா பீ என்கிற பாரியா பீ ஆவார்களை ஷமீர் அகமது பிஜிலி என்பவருக்கு மனம் முடிந்துக் கொடுத்தார்கள். இவர் சாஹெப் மீது மிகுந்தபக்தியும், மரியாதையும் அன்பும் கொண்டு ஒழுகினார்கள். சாஹெபிடம இஜாசத்தும், தாலியும் பெற்று அடிபிறழாது நடந்ததுன் பயனாக அவர்தம வாழ்வில முன்னேற்றமும், மன நிறைவும் கொண்டார்கள். இரண்டாம ˙மகளாரான அம்துஸ் ஜொஹ்ராபி சாஹெபிடம் அரபி, அருது, பார்சி மற்றும் இமலியத்தான் தாலிஸ் முறைகளைக் கற்றுத் தேர்ந்தவர் இவரை ஜனாப் பர்ததார் அஹமத் முனவரி அவர்களுக்கு மனம் முடித்துக் கொடுத்தார்கள்.

## சாஹெப் அவர்களின் விரங்தோம்பல் பண்பு:

சாஹெப் அவர்களை பற்றி நாம் அவரிடம் நெருங்கி பழகியவர்களிடம், அவரை அறிந்தவர்களிடமும், அவர்களிடம் சிகிச்சை அளிக்கப்பட்டவர்களிடமும் கேட்டால் முதலில் அவர்கள் நம்மிடம் கூறுவது சாஹெப் அவர்களின் விருந்தோம்பல் பண்பு தான்.

சாஹெப் அவர்களின் தந்தையார் 3 ஊர்களுக்கு ஜாகிர் தாராக இருந்ததார். சாஹெப் வலியுல்லா அவர்கள் தஞ்சையில் வசித்த போது இரட்டை மஸ்தான் தர்காவின் நிர்வாகியாகவும் இருந்தார். பின் தந்தையாரால் சொத்துக்கள் பாகப் பிரிவினை செய்யப்பட்டபோது தஞ்சாவூர் கிள்ளை, சிரம்பரம் ஆகிய மூன்றில் ஒன்றான கிள்ளலில் 360 காணி நிலத்திற்கு ஜாகீரதாரராக நியமிக்கப்பட்டார்.

கிள்ளை கிராமத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறின் 3 கி. மீ. தூரத்தில் வங்களா விரிகுடா கடல், சவுக்கு, ஆர். என். பதி மரக்காடுகள் கடைமடை காவேரி 1 நீர் பாசனத்தை நம்பியிருக்கும் புன்செய் பூமி, குடி தண்ணீர், கிள்ளை ஷா ரஹ்மத்துல்லாஷ் வலியுல்லாஹ் அவர்கள் தயவில் 1 கி.மீ. தூரத்தில் உள்ள ஒரே கிணற்றில் இருந்து நீர் வர வேண்டும மற்றும் காய்கறிகள் முதற் கொண்டு எல்லாவகையான சாமான்களையும 15 கி.மீ. தூரத்திலுள்ள சிதம்பரத்தில் இருந்து தான் வர வேண்டும்.

மேற்கொண்ட சூழ்நிலையில் இருக்கும் கிள்ளையில் தம்மிடம சிகிச்சைக்காக வரும் மக்கள் அனைவருக்கும் அவர்கள் தம் தேவைகளை நிறைவேற்றி சாதி, மத இன வேறுபாடின்றி சைவம், அசைவம், என்ற வகையில் யார் எதை சாப்பிடுவர் என அறிந்து விருந்தினர்களை உபசரிக்கும் முறை என்றுமே போற்றக்கூடிய ஒன்றாகும் மக்கள் அனைவருக்கும உண்ண உனவு, இருக்க இருப்பிடம் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து வந்தவர்களுக்கு என்ன கோளாறு குழப்பங்கள் போன்றவற்றை நிவர்த்தி செய்து மாதக் கணக்கில் தம் வீட்டில் எந்த ஒரு பிரதிபலனும் எதிர்பாராமல் செய்ததது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சாஹெபின் இந்த விருந்தோம்பல் பண்புக்கு மேலும் பெரும்புகழும் ஏற்படி உற்ற துணையாக இருந்த அவரது மனைவி மிகவும் போற்றுதலுக்குரியவர். இவர் தம் கணவரின் குறிப்பறிந்து வரும் உற்றார், உறவினர், நண்பர்கள் முர்தீன்கள் போன்ற அனைவருக்கும உபசரிப்பு கொடுக்கும் விதம சொல்லில் அளவிட முடியாத ஒன்றாகும். அவர்களின் விருந்தோம்பல் பண்பிற்கு எடுத்துக்காட்டாக நான் இந்த ஆய்விற்காக சாஹெப் வீட்டிற்கு சென்றபோது அவர்களது துணைவியார் என்னை வரவேற்று தங்கள் வீட்டில் தங்கச் சொன்னதும் மிகப் பெரிய சான்றாகும்.

**சாஹெப் வலியுல்லாஹ் ஆதல்:**

இளம் பிராயம் முதலே அல்லாஹிவின் நாட்டம்கொண்டு அவனை அடையும் முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுப்படுத்திக் கொண்டதால் சாஹெப்பை ஞானப் பாட்டையான தஸ்வ்வுஃபில் நடத்திச் செல்வதற்கான முதன் முதலில் அழைப்பு விடுத்தவர்கள் தஞ்சை ஒத்தை மஸ்தான் மகான் ஆவார்கள். அவர்கள் சிபாரிசின் பேரில் நாகூர் நாயகமான காதர் வலி கஞ்ஜசவாயி கஞ்ஜபக்ஷ் (ரஹ்மத்துல்லாஹி அலைவஹி) உத்தரவின் பேரில் தஞ்சை

இரட்டை மஸ்தான் தர்காவில் அவர்கள் தம் கிளைக் கொழுந்தான சாஹெப் அவர்களுக்கு விலாயத்பதவ் நல்கினார்கள்.

நான் கல்வியின் பட்டணம் என்றால் அலி அதன் நுழைவாயில் என்பதற்று சான்றாக விளங்கும் அலிகாரமல்லாஹி லஸ்ஹஜி அவர்களால் தமக்கு விலாயத் வழங்கப்பட்டதை ஷாபான் பிறை 5, ஹ்ஜ்ரி 1389 சரியாக 17.10.1969ல் வெள்ளி இரவு தாம் க்ணட மனாமை (கனவை) தம் கைப்பட சாஹெப் எழுதியுள்ளக் குறிப்பேடு சான்று பகர்கின்றது. அவர்களே எழுதுகிறார்கள்.

இறைவனால்கட்டப்பட்ட விருந்து மஜ்லிஸ் போன்ற பெரும் கட்டம் தெரிகிறது. அங்கு ஒரு சப்பில் (வரிசையில்) நான் எனது ஷேக்கின் இடதுபுறம் நிற்கின்றேன் எனக்கு முன் சஃப்பில் ஹஜ்ரத் அலி (காரமல்லாஹ் வாகஉஹீ) நின்றுக் கொண்டு இருக்கிறார்கள். அச்சத்தின் காரணமாக யார் யார் அங்கு குழுமியிரக்கிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத தெரியவில்லை. பெரிய விசாலமானக் கடத்தில் ஒரு மேஜை உள்ள நாற்காலியில் ஹீஜரத் அலி (கர்மல்லாஹி) வரத்வாஹீ அவர்கள் அமர்நத வண்ணம் என்னைக் கூவி அழைக்க நான் போய் பயபக்தியுடன் அவர்கள் முன் நிற்கின்றேன். அச்சத்தின் மிகுதியான நான் பனிக்கட்டியைப் போன்று உருகி ஒரு கிண்ணத்தில் படிகங்களாக மாறிவிட்டேன். அந்த படிகங்களில் எனது ரூஹி (ஆத்மா) இருப்பதைப் போன்று உணர்கின்றேன். அது ஒரு ஒளியோடு பிரகாசிக்கின்றது. ஹஜ்ரத் அலியார் பல கேள்விகளைக் கேட்க அந்த உயிரான ரூஹிபதில் உரைக்கிறது. இவை எல்லாம் எனக்குத் தெள்ளத் தெளிவாகப் புலனாகிறது. இதற்கு பின் வீட்டின் முற்றத்தில் கொட்டகை வேயப்பட்டு நாற்காலிகள் போடப்பட்டுள்ளதை நான் காண்கிறேன். திடீரென்று ஓர் ஆண் சிங்கம் வெளிப்பட்டு என்னை அழைக்கிறது. நானும் எனது முர்ஷதும் அந்த சிங்கத்தை பின் தொடரிந்தோம். அந்த சிங்கம் எங்களை அழைத்துக் கொண்டு ஒரு மைதானத்திற்குச் சென்று விடுகிறது. அங்கு உயரமான பகுதியில் ஹஜ்ரத் அலியார் என்னைப் பார்த்துக் கூறுகிறார்கள். என்னைக் காண்பது சுபசோபனமாகும். அந்த சிங்கம் இருந்த மேஜையில் நான் அமர்ந்திருக்கின்றேன். அருகிலேயோ எனது முர்ஷத் அவர்கள் ப்சசை தலைப்பாகை அணிந்த வண்ணம் என்னைப் பார்த்து ஹஜ்ரத் அலி அவர்களை தரிசிப்பது சுபசோபனபாகும் என்று பகர்கின்றார்கள். இத்துடன் எனது மனாம் (கனவு) முடிவடைகிறது.

இந்த வெளிப்பாட்டிற்கு பின் சாஹெபின் மர்தபாபடிகரம் உயர்ந்து கராமத்துக்கள் பல நடத்தியது உலகம் நன்கறியும். சாஹெப் அமர்ந்த தீன் தவங்களும் சில்லா இருப்பிடங்களும்.

சாஹெப் அவர்கள் நப்ஃஸ் என்றும் இச்சையை அடக்கி அல்லாஹ்வின் நேசத்தைப் பெற கருமையாக தவங்களும், சியாஜ்த்துகளும் மேற்கொண்டார்கள். பற்பல தர்ஹா மகான்கள் சன்னதியில் உப்பில்லா கஞ்சியுடன் இறைவன் பால் ஜிகிர் (தவம்) புரிந்துள்ளார்கள்.

சில்லா என்பது இறை நேசத்தைப் பெறுவதற்கு அல்லாஹ்வின் ஜகரில் (தவத்தில்) தம்மை ஈடுபடுத்தி ஓர் இடத்தில் 40 நாட்கள் அமர்ந்து செய்யப்படும் அமலாகும் (நற்செயலாகும்) அவுலியக்களின் உத்திரவு:

### சாஹெப் அவர்கள் கில்லா இருந்த இடங்கள்:

1. ஆசாரே ஷரீப் தைக்கால் (தஞ்சை)
2. மன்சூர் சுல்தான் தர்கா (தஞ்சை)
3. ஸானி சுல்தான் தர்கா (வர்கராமண்டி)
4. குதுப்பி ஷா தர்கா (திருச்சி)
5. தப்லே ஆலம் பாதுஷா தர்கா (திருச்சி)
6. பீர்ஷா காதிரி தர்கா (தஞ்சாவூர்)
7. சையத் முஸ்தபா தர்கா (டி. களத்தூர்)
8. காஜாமலை தர்கா (திருச்சி)
9. சீனி அவாவா பள்ளிவாசல் (தஞ்சாவூர்)
10. பல்லாவரம் மலை (சென்னை)

மற்றும் தம் கல்வி காலங்களில் காடு, மலைகளில் என்று இறைநாட்டத்தைப் பெற தவம் மேற்கொண்டுள்ளார்கள். சாஹெப் சில்லா இருந்தபல இடங்களில் அக்காலத்தில் பகலில் சொல்லவே பயம் உண்டாகக் கூடிய இடங்களும் இருந்துள்ளன. மேற்கண்ட நிலைகளில் சாஹெப் அவர்களால் இந்த உலகை வாழ்நாளில் பலகராமத்து நிகழ்ச்சிகள் (அற்புதங்கள்) நடைபெற்றுள்ளன என்றாலும் குறிப்பாக இந்த இறைப்பாதையில் வருவதற்காக சாஹெப் அவர்களை முதன் முதலில் அழைப்பு விடுத்தவர்கள் தஞ்சை ஒத்தை மஸ்தான் வலியுல்லாஹ் (அல்லது) அவ்லியா ஆவார்கள் என்றும் அவர்களின் சிபாரிசின் பேரில் நாகூர் நாயகமான காதர் வலி கஞ்ஜே சலாயி அவர்களது அருளும் பரக்கத்தும், மேலும் அவர்களின் உத்தரவின் பேரில் இரட்டை மஸ்தான் வலியுல்லாஹ் அவர்களிடத்தில் கிடைக்கப் பெற்ற பரக்கத்துகள் பல என்பதை கண்கூடாக நாம் அறிகின்றோம்.

சாஹெப் அவர்கள் தம்மை தேடி, நாடி முராது கேட்டு வருபவர்களை தமது குறிப்பிட்ட முறையிலான துவா (பிராத்தனை) இலாமஜ் முறையைக் கொண்டு நிவர்த்தி செய்தார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஹஜ்ரத் அவர்கள் முன் அமரும்போது அவர் வூனாகவோ அல்லது பெண்ணாகவோ இளைஞராகவோ, முதியவராகவோ, யாராக இருந்தாலும் அவர்களுக்கு செய்யப்பட்ட செய்வினையோ, ஆவிசேஸ்டையோ தான் கொடுக்கும் தொல்லைகளையும் பாதிக்கப்படடவர் மேல் வந்த கூறம். சில சமயம் அவைகள் முரண்டு பிடிப்பதும், கட்டுக்கடங்காமல் போவதும் உண்டு. அதுபோன்ற வேலைகளில் சாஹெப் அவர்கள் எந்த வலிமார்களையும் குதுப்மார்களையும் ஷேக்மார்களை "அல்மதத்" உதவி என்று அழைப்பார்களோ அந்த நொடியே அல்லாஹ்வின் நாட்டத்தால் அவர்களின் உதவி வந்து சேரும். இவைகள் எல்லாம் சொல்லியோ விளக்கவோ முடியாதது. அதைப்பார்த்து உணர்வுப்பூர்வமான நம்பிக்கையோடு உணரத்தக்கவை.

"சாஹெப்" என்னும் பதத்தின் பொருள் "நேசிப்பவர் என்பதாகும். சாஹெப் தம் இறுதிக்காலத்தில் அதிகம் முகம்மது நபி அவர்கள் மீது பலவிதமான தருத்–சரிப் (சலவாத்துக்கள்) ஓதியும் விளக்கியும வந்ததார்கள். இறுதியில் அவர்களுக்கு சாஹெப் என்பது காரணப் பெயராகவும் முடிந்துவிட்டது.

இறைவன் தனது திருமறையில் "முயற்சி உண்டானால் பலன் பெறலாம். அவன் முயற்சித்ததே அவனுக்கு கிடைக்கும்"[2] என்கிறான். அல்லாஹ்வுக்கும் வழிபாடுங்கள் ரசூலுக்கும் வழிப்படுங்கள், உங்களில் உள்ள தலைவருக்கும் (உலில் அம்ருகளுக்கும்) வழிபடுங்கள் என்பது இறைவனின் வாக்காகும். இதையே சாஹெப் அவர்கள் கடைப்பிடித்து தனக்கென்று "வலி" ஸ்தானத்தை உயிருள்ளபோது, மறைந்த போதும் பிடித்துள்ளார்கள்.

"வலி" எனும் பதம் "வலா" எனும் மூலத்திலிருந்து பிறந்தமையால் அப்பதத்திற்கு "சமீபம்" "சாயுட்தியம்" என பொருள்படும். "அவுலியாக்கள் (வலிமார்கள்) என்னுடைய பரிவட்டத்திற்குள்ளன இருப்பவர்கள்.

---

2 அல்குர் ஆண் அத்தியாயம் 53, வசனம் 39

– என்னைத் தவிரவேறு யாரும் அவர்களை அறியமுடியாது" என இறைவன் தனது திருமறையான கூறுகிறான்.

மேலும் நபியவர்கள் "நிச்சயமாக அல்லாஹ்வுடைய அல்லியாக்கள் மரிப்பதில்லை. ஆனால் அவர்கள் ஓர் இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு செல்கிறார்கள். (உறதீஸ்) சாஹெப் அவர்களும் தம்மை ஆண்டவன் அளவில் "பனா" (அர்ப்பணித்து) வாக்கிவிட்டக்காரணத்தால் அவனைக்கொண்டே அவர்கள் தரிப்பட்டுள்ளனர். அவனுடைய உத்தரவுக் கொண்டே மனிதர்களுடைய நாட்டத்தை நிறைவேற்றிக்கொடுத்தார்கள் – கொடுக்கின்றார்கள். தான் செய்தாலும் செய்துமுடிப்பவன் அல்லாஹ்வே" என்பது இவர் கருத்து. இதையே தான் "சாஹெப்" அவர்கள் இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள் என்றுக் கூறுவார்.

மனிதனின் உயிர் ஓர் புனித இறைத்தொடர்பாகும். மறைக்கப்பட்ட ஒரு பொருளின் வடிவத்தைப்போன்று இருக்கின்றது. ஒரு அறிவு அதை யாரும் அறிய முடியாது இறைவனை அறிபவர்களைத்தவிர இறை ரகசியங்களை அறிய துடிக்க வைப்பது மனிதனின் இறை உயிர் (ரூஹி அல்லாஹ்) பந்தமும், இவை இறைவனும் இணைக்கப்பட்ட ஓர் இணைப்புத்தான் தன்னுடைய தீர்கக தரிசிகளுக்கும், இறை நேசர்களுக்கும் மட்டும் அல்லாஹ்த்தாலா புரியவைக்கும் தன்மையை விட்டு, விலகி புரிந்துக்கொள்ளும் தன்மையைக்கொண்டு மட்டும் தெளியபடுத்துகின்றான். இது பொதுவாக எல்லோருக்கும வழங்கப்படும் தன்மையன்று இந்த கருத்துக்களையே சாஹேப் செயல்படுத்தினர்.

இறைவன் கூறுகிறான் என்னுடைய சொர்க்கம் என்னை அடைந்து இருக்கவில்லை என்னுடைய பூமியும் என்னை அடைந்து இருக்கவில்லை, ஆனால் என்னுடைய விசுவாச அடிமையின் இதயம் என்னை அடைந்ததே இருக்கிறது. நான் மறைக்கப்பட்ட பொக்கிசம் ஆகும். நான் வெளிப்படையாகி அறிந்தவனாக விரும்பினேன். எனவே இந்த உலகத்தை நான் படைத்தேன, இறைமறைக் கூறுகிறது. "நான் (அவனை) பூமியில் (எனது) பிரதிநிதியாக அமைத்து இருக்கிறேன்.[3] இறைவனின் பிரகாசித்திற்கு உவமை, ஒரு மாடக்குழியில் பளிங்கு கண்ணாடியில் இருக்கும் விளக்காகும்[4]. அதாவது மெய்ஞான ஜோதியை தன் கட்டளையால் தன் அடியார்களில் தான் நாடியவர்கள் மீது பிரகாசிக்க செய்கிறான்5. இதையே தான் சாஹெப் அவர்கள் ஆய்ந்து ஆராய்ந்து அமல்செய்து (நடைமுறைப்படுத்தல்) இறைவனின்

மெய் ஞானஜோதியை தன் மீதும் பிரகாசிக்கச் செய்து இறைநேசக் செல்வராாக வாழ்ந்து வந்தார்கள்.

கடும்தவம் செய்து, உலக இச்சைகளை விட்டு, உலக வாழ்க்கையை விட்டு தம்மை அப்புறப்படுத்திக்கொண்டு எளிமையாகவும், மற்றவருக்கு தாம் ஓர் எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்த இறைவனின் அருளால் "வலி" (அ) அல்லியா என்ற மெய் ஞானஜோதியைப்பெற்று தாம் இவ்வுலகில் இருந்தபோதும், இவ்வுலகை விட்டு நீங்கிய பின்னரும் மக்களுக்கு அரிய சிகிச்சை அளிக்கிறார்கள். மக்கள் அனைவரும் ஒரே குலம், ஒருவனே தேவன் என்ற முறையில் சாஹெப் அவர்களை தருசிக்கின்றார்கள்.

---

3 அல்குர் ஆன் அத்தியாயாம்-2, 80வது வசனம்

4 மேலது அத்தியாயம் 24, 35வது வசனம்

5 மேலது அத்தியாயம் 40, 15வது வசனம்

# அத்தியாயம் – II

## சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் தொண்டு

### உலமாக்கள், மஷயாக்குகள் ஆகியோருடன் சாஹெபின் தொடர்பு:

சாஹெப் அவர்கள் அனைத்து இடத்தில் உள்ள மக்களிடமும் தொடர்பு கொண்டிருந்தனர். பன்னூல் ஆசிரியரான ஆலி ஜனாப் மர்ஹீம் சையத் இப்ராஹிம் சாஹெப் எம்.ஏ.எல்.டி. ஹஜ்ரத் அவர்கள் பல நூல்களை தஞ்சை ஆசாரே ஷகிபில் தங்கி சாஹெபிடம் பல மஷ்விராக்களை பெற்று எழுதுவதை வடிமையாக கொண்டிருந்தார்கள். மௌலான மௌலவி பி.எஸ்.கே. முகம்மது இக்ராஹிம் மர்ஹிம் உத்தமபாளையம், அவர்களும், நாகூர் வாழ் மௌலானா சையத் மொஹித்தின் ஆலிம் பாகவி அவர்களும் சாஹெபின் உற்ற நண்பர்களாகவும், ஆசார் தைக்காலில் பல நாட்கள் தங்கி கிதாபுகள் (புத்தகங்கள்) படிக்கவும், சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் தொடர்பு கொண்டு இருந்தார்கள். காயல்மேதை அஸ்ஷைக் மௌலானா மௌவலி அப்துல் காதிரி ஆஃபி ஹஜ்ரத் அவர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு இருந்தார்கள். காயல்மேதை அஸ்ஷைக் மௌலானா மௌவலி அப்துல் காதிரி ஆப்பி ஹஜ்ரத் அவர்களுடன் கடிதத் தொடர்பும் அவர்களின் தவவு புத்தகங்களில் நாட்டமும் கொண்டிருந்தார்கள். இன்றைய நவீன ஜமாத்துக்களை தக்க ஆதாரங்களுடன் சாடி மக்கள் முன் அவர்களின் முகத்திரையை கிழித்து சொற்பொழிவாற்றும் மௌலானா மௌலவி உறாபிலு எப்.எம்.இப்ராஹிம் ரப்பானி பாகவி அவர்களுடனும் புத்தகங்களை வெளியீட்டில் சாஹெப் அவர்களது தொடர்பு இருந்தது. தஞ்சை தரணியில் முதன் முதலாக 1959ல் உருதுவில் பயான் சொல்லவும், தீனின்பால் தஞ்சை வாழ் மக்கள் பயன்பெற காரணமாக விளங்கினார்கள்.

### சாஹெப் புத்தக வெளியீடுகள்:

சாஹெப் அவர்கள் ஜாதி, மத இனம், நிறம் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி சமூகங்கள் அனைத்தும ஒற்றுமையோடு, உன்னத பண்போடு வாழ வேண்டும என்று சிந்தித்து மட்டுமில்லாமல் அதை செயல்படுத்திட சிறு சிறு புத்தகங்கள் நோட்டீஸ்கள் போன்றவற்றை வெளியிட்டார்கள்.

குறிப்பாக கிள்ளையில் அடங்கியிருக்கும் மகான் ஹஜரத் ஷா ரஹ்மத்துல்லாஹ்யுல்லாஹ் அவர்களால் கைப்பட எழுதியிருந்த 'ஷிர்ருன் நாமா' என்ற அிறய புத்தகத்தை சாஹெப் அவர்கள் கோர்வை செய்து, திருத்தி மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் உருதுவில் முன்னுரை எழுதி 1976ம் ஆண்டு புத்தக ரூபமாக பார்ச்சி மொழியில் வெறியிட்டார்கள்.

சாஹெப் அவர்களின் இந்த பணியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை வகுப்பு வாதங்களால் ஏற்படும் கலவரங்கள் அடங்கி மனிதத்தன்மையோடு எல்லோரும் வாழ வேண்டும் என வெளியிட்ட சமூக சிந்தனையே மேற்கொண்ட பிரசுரங்கள் ஆகும்.

**சமூகத்திற்காக சாஹெபின் பணி:**

சாஹெப் அவர்கள் சமூக ஒற்றுமைக்காக நோட்டீஸ்கள் அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றை வெளியிட்டார்கள்ள அவற்றின் பட்டியல் பின்வருமாறு காணலாம்.

1. வகுப்பு வாதமும் நாசச் செயல்களும் (புத்தகம்)
2. எல்லோரும் மனிதர்களே (நோட்டீஸ்)
3. கலவரங்கள் ஓர் ஆய்வு (நோட்டீஸ்)
4. சரித்திர உண்மையும் ஜன சங்கமும் (அறிக்கை)
5. தாழ்த்தப்பட்டோர் சீக்கயர்களாக மாறிக் கொண்டு இருக்கிறார்களா? (நோட்டீஸ்)
6. மன்னர்களும், கோயில்களும் (நோட்டீஸ்)
7. சிறுபான்மையினர் யார், (நோட்டீஸ்)
8. முஸ்லீம்களின் தயுவ நிலலில் முஸ்லீம் அல்லாதவர் (புத்தகம்)

9. திப்பு சுல்தான் (புத்தகம்)

10. பரிதலில் போருக்கு பணிவிடையும் ஓர் மகானும் (புத்தகம்)

11. மறுபிறவு உண்டா? (நோட்டீஸ்)

12. Islam ober shadow all Isms

13. The Truth

மேற்கூறிய அனைத்தும் சாஹெப் அவர்கள் வெளியிட்டவையாகும். அவர்கள் சமூக மக்கள் அனைவரும் ஒன்றுப்பட்டு ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என அரும்பாடுபட்டார்கள். அதற்குச் சான்றே மேற்கூறிய நூல்களும், அறிக்கைகளும், நோட்டீஸ்களும் ஆகும். இவற்றில் சிற எடுத்துக்காட்டுக்களை இங்கே அளிக்கப்படுகின்றது.

நமது நாடு வெள்ளையர் ஆதிக்கத்தை விட்டும், விடுதலைப் பெற்று சுதந்திரம் அடைந்தபின் ஒரு தேசத்திற்கு மிக மிக இன்றியமையாதது 'பொருளாதாரம்' பண்பாடு, நாகரீகம் போன்றவற்றில் வானளாவ உயர்ந்து சென்றிட நல்ல பல வாய்ப்புக்கள் இருந்தும் ஏனோ தெரியவில்லை, ஒருவருக்கொருவர் சகோரத்துவ மனப்பான்மையுடன் முன்னேறிச் செல்வதற்கு பதிலாக பல்வேறு வகை பாரபட்சம் நிறைந்த தடைக்கற்கள் இந்திய மக்களிடையே ஏழுப்பப்பட்டுவிட்டன. இதன் விளைவு மொழி, இனம், மாகாணம் போன்றவற்றில் ஜாதி என்னும் பிரிவுச் சுவர்கள் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிக் கொண்டே வருகின்றன.

இவை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும ஒற்றுமைக்கும், பொருளாதாரத் தன்னிறைவுக்கும், மிகப் பெருமளவில் வெகுவாக பலவீனத்தைத் தேடி தருவதுடன் இவை நாட்டின் பொருளாதாராச் சீரரீவிற்கும் அடிகோலுபவை ஆகும். இனக்கலவரங்கள் வகுப்புச் சண்டைகள் எவ்வாறு உருவெடுக்கின்றன? இவற்றிற்கு யார் காரணம்?

'சிவசேனா' ஜாதி அடிப்படை வாய்ந்தது! விரோத மனப்பான்மையும் வகுப்பு வாதப் பித்தும இணைத்த ஓர் இயக்கமாகும். தற்போது மகாராஸ்டிரா மாநிலத்தில் சிவசேனா

கட்சியின் குழப்பம் முழு வேகத்தோடும், விரைவாகவும பரவி வருகிறது. இக்கட்சியின் தலைவர் "பால்தாக்கரே" என்பவர் ஒரு பழைய ஜர்னலிஸ்ட், மற்றும் கார்ட்டுனிஸ்டாக இருந்தவர். இவரின் இவ்வியக்கம் மிகப் பெருமளவில் வகுப்பு வாதக் கொள்கை வாய்ந்ததும், முஸ்லீம்களுக்கு எதிரான ஓர் இயக்கமாயும் உள்ளது. "பெருமையோடு நான் இந்து என்று சொல்" என்பது இவரது முழக்கங்களில் ஒன்றாகும். "இவரின் இம்முழக்கத்தை இன்றும் கூட வால் போஸ்ட் ரூபத்தில் நகரங்களிலும், கிராமப்புறங்களின் சுவரோட்டிகளிலும் காணலாம். முஸ்லீம் மக்களுக்கு விரோதமாக வெறுப்பு கலந்த நஞ்சை இவர்கள் உமிழ்கின்றனர்". இவ்விஷயத்தில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் கீழ் இயங்கும் கிளைகள், இன்னும் இவைப் போன்ற பல இயக்கங்கள் அனைத்தும் இதன் செயலாக்க அணுகு முறைக்கு மிகமிக பின்தங்கிவிட்டது என்றேக் கூறலாம்."

இந்த சிவசேனாவின் முதல் குறி இந்து முஸ்லீம் கலவரங்களைத் தாண்டி விடுவது, 2வது குறி ஹாரிஜன குடிமக்களும் தலித் மக்களுமாவர். காரணம் Riddles in Hinduism, என்னும் நூல் சிவசேனாவுக்கு ஹரிஜனங்களும், தலித் மக்களும் சரியான பதிலெடிக் கொடுத்ததே ஆகும். இதன் காரணமாக மராட்டிய மாநிலத்தில் சிவசேனா கட்சி இந்து மக்களும், தலித் மக்களுக்குமிடையே பெருமளவில் மோதல் மூண்டு உள்ளது. "தொரப்" என்னுமிடத்தில் மற்றும் வேறு பல இடங்களிலும் தலித் இந்துக்கலவரங்கள் நடந்துள்ளன.

வெறுப்பைக் கக்கும் சில இந்துத் தீவிரவாதிகளின் அறிவற்றச் செயலால் தவித் சமூக மக்கள் இப்போது முஸ்லீம் சமூக மக்களை நோக்கிச் சாயத்துவங்கி உள்ளனர். மேலும் பல இடங்களில் பேராசிரியர் "ஜோகன் தார் கௌடேயும்" ஹாஜி "மஸ்தான் மிர்ஜாவும்" இணைந்து உருவாக்கிய இயக்கமான 2 "தலித் முஸ்லீம் அலப்சான் கியூத் சொரக்ஷா மஸா சங்காவின் பல கிளைகளும் நிறுவப்பட்டுள்ளன.[1]

---

1 சை. சையத் ஷா இஸ்மத்பர்ஷா வகுப்பு வாதமும், நாசச் செயல்களும், திருச்சராப்பள்ளி ரப்பானியா பிரிண்டர்ஸ்: 1989 ப. 11.

"தீய எண்ணமும், தீயக் கொள்கையும் கொண்ட மேற்படி வகுப்புவாத கட்சிகள் ஆங்காங்கே நாச வேலைகளில் ஈடுபடுவதையும், இளைஞர்களது உள்ளத்தில் வெறுப்பென்னும் நஞ்சைக் கலந்து அவர்களை துவேச மனப்பான்மை உள்ளவர்களாக ஆக்கிடத் திட்டமிட்டு வேண்டுமென்றே கலவரத்தையும், குழப்பத்தையும் உருவாக்கு விடுகின்றனர். இவர்களது குறுகிப்போன எண்ணங்கள் இவர்களின் மூலையைச் சிதறச் செய்து இவர்களிடையே யார் விரோதி, யார் நண்பன் என்னும் வித்தியாசம் உணர வொட்டாமல் செய்துவிட்டது. இதனால்தான் இவர்கள் தம் இனத்தவர் மீதும் தமது அக்ரம அராஜகத்தை கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இவற்றையெல்லாம் சகிக்க முடியாமற்போனதால் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கார் நான் இந்து மதத்தில் பிறந்துவிட்டேன். அவள் வயிற்றில் பிறப்பதை தடுத்தல் என்னால் இயலாதக் காரியம். ஆனால் நான் அந்த சமயத்தில் தர்மத்தில் சாகமாட்டேன். இது என்னால் இயலக்கூடிய காரியம என்று கூறியதை 1935 முதல் 1965 வரை செய்துக் காட்டினார்.

அதன்பின அவர் Riddles in Hinduism என்னும் ஓர் நூலை எழுதமினார். அதன் ஒரு பகுதி 'ராமனும் கிருஷ்ணனும் ஓர் புதிர் என்ற பெயரில் தமிழில் வெளிவந்துள்ளது.[2]

இன்னும் ஓர் உதாரணம், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவர் தேவ்ராஸ் கல்கத்தாவில் நடைப்பெற்ற ஒரு கூட்டத்தில் பேசியபோது "இந்துஸ்தான் என்பது இந்து ராஷ்டிரா நாடாகும். இங்கு முஸ்லீம்களுக்கு இடமில்லை. இங்கு அவர்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வாறே குர்ஆன், பைபிளுக்கும் இங்கு இடம் கிடையாது என்று பேசினார்.[3]

---

2 சை.சையத் ஷா இஸ்மத் பாஷா வகுப்பு வாதமும், நாசச் செயல்களும் (திருச்சிராப்பள்ளி, ரப்பானியா பிரிண்டர்ஸ், 1989) பக்கம், 13.

3 சை. சையத் ஷா இஸ்மத் பாஷா, வகுப்பு வாதமும், நாசச் செயல்களும், (திருச்சிராப்பள்ளி : ராப்பானியா பிரிண்டர்ஸ், 1989), ப. 13.

பம்பாய் முனிசிபல் கார்ப்பரேசம் ஸ்டேடிங் கமிட்டி கூட்டம் நடைப்பெற்றபோது அதனுடைய சேர்மன் (சிவசேனாவாதி) சட்டவிரோதமாக உள்ள பள்ளிவாசல்கள் அனைத்தும்

இடித்துவிட வேண்டுமென அறிக்கைவிட்டார். அவரின் இத்தகைய பலாத்காரப் போக்கையும் பிற மதத்தினரின் உணர்ச்சிக் கொந்தளிப்பை தூண்டிவிடும் போக்கையும் கண்டித்து அங்கு இருந்த எதிர்கட்சியினர் எல்லோரும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வெளிநடப்புச் செய்தனர்.

காங்கிரஸ் தலைவர் நியாஸ்வினோ என்பவர் ஜனநாயக அமைப்பின்படி எல்லா மதத்தினருக்கும தத்தம் தமது கொள்கைப்படி நடந்துக் கொள்ள பரிபூரண உரிமையுண்டு. அதன்படி இஸ்லாமியர்களை வணக்கத்தைவிட்டு நிறுத்த நீ யார்? இன்றும் பம்பாய் முழுவதையும் அலசிப்பார்த்தால் சட்டவிரோதமான முறையில் இடங்களை ஆக்ரமித்துக் கொண்டிருப்பவை அதிகமதிகம் கோயில்கள் தான். சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்டுள்ள ப்ளிளவாசல்களை இடிக்கும் முன் சட்டவிரோதமான முறையில் எழுப்பபட்டுள்ள கோயில்களை அனைத்தையும இடித்துவிடுங்கள் என்று சொல்ல ...... இதை கேட்ட "ஹீஜக்கள் பம்மல்" என்னவர் நியோஸ்னோவை அதட்டிக் கூட்டத்தைவிட்டு வெளியேற சொன்னார். இவ்வாறு அவர் சொல்லது கண்டித்தக்கது எனக் கூறி நியாஸ்வோவுடன் எதிர்கக அனைவரும் வெளி நடப்புச் செய்தார்.[4]

மேற்கண்ட இயக்கங்கள் அனைத்தும் சம்பகாலங்களில் கூட சிறுபான்மை வகுப்பினர் மீதும், தவித் வகுப்பினர் மீதும் முஸ்லீம்கள் மீதும் கலவரங்களை உருவாக்கினர். இவற்றையெல்லாம் தடுத்து அவைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் (சாஹெப்) மட்டும் சொல்லவில்லை. மாறாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் 19 மே 1988 இதழும் கூறியது.

முற்காலத்தில் இந்திய நாட்டை அரசு புரிந்த நவாபுகள் எத்தனையோ இந்துக் கோயில்களுக்கும், அவர்களது தர்மஸ்தானத்திற்கும் இவாமும் மாகியமும் கொடுத்துள்ளதாக சரித்திரம் கூறுகின்றது. இதுபோன்ற இந்து அரசர்களும் மந்திரிப் பிரதானிகளும் முஸ்லீம் இன மதத்தின் கல்வித் கூடற்களுக்கும், பள்ளி வாசல்களுக்கும் இவாமும், மானீயமும் தந்துள்ளதாக வரலாறுகள் நீருபிகின்றனர். இவ்வாறு வழங்கப்பட்ச் சொத்துக்கள் இன்று வரை அவரவரா் கைவசத்திலேயே இருந்தும் வருகின்றன.

---

4 சை. சையத் ஷா இஸ்மத் பாஷா வகுப்பு வாதமும், நாசச் செயல்களும் (திருச்சிராப்பள்ளி : ரப்பானியா பிரிண்டர்ஸ், 1989) ப. 13.

அவற்றை இன்னும் பேணிகாத்து வருகின்றனர்:

1. பாலஜி டாகர்ஜியல் தங்கமூர்த்தி.

2. முகலாயப் பேரரசர் ஊரங்கசிப்பால் வழங்கப்பட்ட எட்டு கிராமங்களில் சர்க்கார் உத்திரவுப் பத்திரம். அத்துடன் இச்சொத்து தலைமுறை தலைமுறையாக அவது குடும்பத்திலேலே இருக்க வேண்டும் எனவும் எழுதப்பட்டுள்ளது.[5]

இதன்ற மாமன்னர் திப்புசுல்தான் அவர்கள் திண்டுக்கல், கரூர், ஸ்ரீரங்கம், போன்ற ஊர்களிலுள்ள கோயில்களுக்கு இனாமாக கொடுத்திருக்கிறார். சிதம்பரம் நடராஜப் பெருமாள் கோயிலுக்கு அவர் தங்கச் சிலை கொடுத்தது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இதுபோன்றே நாடு முழுவதிலும் ஒரு இனத்தார் மீது இதர இனத்தார் பாசம் கொண்டு நிறையப் பரிசுகளை தத்து ஆதரித்து வந்துள்ளனர். அத்தகைய வரீயில் நம் முன்னோர்கள் அனைவரும் நடந்ததால் தாம் நாடும் நல்ல நிலையில் முன்னேற்றத்துடன் சுபிட்சனமாய் இருந்தும் வந்தது. எந்த சமூகமாக, எந்த நாடாக இருந்தபோதிலும், அங்கு வாழும் மக்களிடையே ஒற்றுமை நல்லென்னம் போன்றவை இருந்தால் தான் அந்நாடும், அச்சமூகமும் உயர்வுப் பெறும் மேன்மையடையும் என்பது நிச்சயம்.

இவ்வாறெல்லாம் அன்றை அரசர் பெருமக்கள் ஜாதி, இன, மதம், பாராது அன்பு வழி நம்வழி எ னநடந்து வந்துள்ளனர். பின்னும் இதில் ஒரு இறைவனைத் தவிர யாருக்கும் யார் மீதும் எவ்வித மதுரை கோரியப்பாளையத்தில் ஒரு பள்ளிவாசல் உள்ளது. அதல் பரிபாவனத்திற்காக கல் பாண்டிய அரசனால் பதினொன்று (அ) பனிரெண்டாவது நூற்றாண்டில் ஆறு கிராமங்கள் கொடுக்கப்பட்டன. 1573 ஏ.டி. யில் வீரப்பநாயக்கர் அதைக்குறித்து விசாரனை செய்ய அப்பட்டயத்தை ஹர்ஜிதம் செய்துள்ளார்.

---

5 சை. சையத் ஷா இஸ்மத் பாஷா <u>வகுப்பு வாதமும், தாசச் செயல்களும்,</u> திருச்சிராப்பள்ளி, ரப்பானியா பிரிண்டர்ஸ், 1989 ப. 24.

மேலும் மதுரையை ஆண்ட "மக்கம்மா ராணி" அவர்கள் திருச்சிக்கு அருகிலுள்ள சமயபுரம், ஈச்சம்பட்டி போன்ற ஏழு கிராமங்களை தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள கிள்ளை என்னும் சிற்றூரில் அடங்கப் பெற்றிருக்கும் ஹஜ்ரத் ஷாஹ் சையத் ரஹ்மதுல்லாஹ் வலி காதிரி ஷித்தாரி அவர்களுக்கு இனமாகத் தந்துள்ளார். (இந்த தர்காவை தாம் சாஹெப் அவர்கள் இன்ளையில் நிர்வாகித்து வந்தனர்).

தஞ்சையை சோழர் குலத்து அரசர் பெருமக்கள் நாகூர் ஆண்டகைக்கு இனாமாக நிலங்கள் கொடுத்தது மட்டுமின்றி சையத் ஹாதிஷாஹ் என்ற மகானுக்கு ஆயிரம் வேலியும், பிர்ஷா காதிரி அவ்வியாவுக்கும், ஷிஸ்மன்சூர் வன் என்ற மகானுக்கும் 900 ஆயிரம் வருடத்திற்கு முன் இனாம் வழ்ககு கௌரவிக்க சம்பவம் நீண்ட உருளை வடிவம் கல்வில் குறித்து வைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்:

இன்னும் உத்திரப்பிரேதேசத்தில் சத்தர்கோட் என்னும் சிற்றூரில் ஒரு சிறு கோயிலொன்று உள்ளது. அக்கோயிலின் பூசாரி பெயர் "சாராணயதால்" என்பதாகும். அவரிடம் இரண்டு பொருள்கள் உள்ளன. அதிகாரமும் கிடையாது இதைவிட்டு, நியாமற்ற முறையில் ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்வதோ, இழிவுப்படுத்துவதோ, தடுப்பதோ ஒருவரது கொள்கைக்கு ஊறுவிளைக்கும் வகையில் மற்றனர் தடையாக நிற்பதோ, செயல்படுவதோ தகாத முறையாகும்.

இன்று எங்கு நோக்கினாலும் மனிதர்களுக்கிடைய தூயமனம், அன்பு கருணை, இரக்கம், பிறருக்கு உதவிசெய்யும் ஆசை போன்ற நற்பண்புகள் குறைந்து சண்டைச் சச்சரவு குழப்பங்களே மிகுந்துப்போய், ஒருவருக்கொருவர் பொறாமையும், குரோதமும் பகையும், விரோதமும், வெறிச்செயல் போன்ற கொடிய நோய்கள் மிகைத்துக்கொண்டே வருகின்றன. இவற்றை வளரவிட்டு விடுவோமாயின் இளைஞர்களும் வருங்காலச் சந்ததியினரும் மனிதர்களாகவே வாழ முடியாது போய்விடும். நமது நாடு நரகமாகக் காட்சியளிக்க்க துவங்கிவிடும் இவ்வாறெல்லாம் மாறக்கூடாதென நாம் எண்ணினால் மேற்கண்ட தீய எண்ணங்கள், குணங்கள் வளர்ந்து பரவவிடாதவாறு காப்பதுதான் இந்நாட்டு மைந்தர் ஒவ்வொருவரது சொந்தப்பணியாகும்.

எனவே சுயநலங்களின் சூழ்ச்சிக்கும் பலியாகி சீராழிவதைவிட "அன்பே மதம், நேசமே மார்க்கம் சகோதரர்துவமே இனம்" என்பதைப் புரிந்துக்கொண்டால், இதுவே மனித இனத்துக்கு சுகத்தையும் சுபிட்சத்தையும் பெற்றுத்தரும்.

சாஹெப் அவர்கள் தமது நூலான் வகுப்புலாதமும், நாகச்செயல்களும் என்பதில் தொகுத்து அளித்து மக்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தினர் என்று சரி, சாதி சமய இன கலவரங்கள் குழப்பங்கள், கொலை, கொள்ளை போன்ற எந்த ஒரு தீயச்செயலிலும் ஈடுபடாமல் தடுக்கபல எளிய வழிகளைக் கையாண்டனர். மேலும் இறைவன் தனது திருமறையில் மேலும் மனிதர்களே! உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து தான் படைத்தேன் என்கிறான்.[6]

சாஹெப் அவர்கள் மேற்கூறிய இறைவசனத்தின்கேற்ப தம் வாழ்நாளில் சாதி, மத இன வேறுபாடுன்றி வாழ்ந்தார்கள். "ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாட்டிற்கும், சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் எந்த ஒரு கெடுதலும் வராவண்ணம், தம்மால் இயன்றதை, தம் சொந்த செலவில், எந்த ஒரு பிரதிபலனும் எதிர்பாராமல் செய்தார்கள்.

---

6 அல்குர் ஆன் : அத்தியாயம் கால்நடைகள், வசனம் 98.

## பொருளாதாரத்திற்காக சாஹெப் அவர்களின் பணி:

ஏழை எளியவருக்கு உதவிட வேண்டும் என்று பொருளாதார சிந்தனையின் அடிப்படையில் இஸ்லாமிய தத்துவப்படி வட்டியில்லா கடன்கள் அளிக்கும் "இம்தாதிபைத்துல்மால்" என்ற ஒன்றை ஏற்படுத்திய பல ஏழைகளுக்கும், ஜாதி, மத பேதம் இன்றி உதவிடச் செய்தார்கள்.

கிள்ளை வலியுல்லாஹ்' அவர்கள் பெயரில் "ரஹ்மத்பைத்துல்லாமால்" என்று நிறுவி அலுவலக ஊழியர்களைக் கொண்டே தாமும் சேர்ந்து நன்கொடைகள் வழங்கி தர்கா டிரஸ்ட் சிப்பந்திகள் வட்டியில்லாக்கடன் பெற்று பயனடைய வழிவகை செய்து கொடுத்தார்கள்.

சாஹெப் அவர்களது இஸ்லாமிய பொருளாதார சிந்தனையின்படி ஜனாப் அஃசையத் முபாரக் அவர்கள் சாஹெபின் ஆலோசினையும், உத்திரவும் பெற்று இதே போன்ற ஈரோட்டில் தம் உற்றார். உறவினர் மற்றும் நண்பர்களைக் கொண்டு பிரதி மாதம் தோறும் சிறு தொகை சேகரித்து ஜாதி, மத இன பேதமின்றி ஏழைகளுக்கு உதவிடும் நல்வழியைக்காட்டினார்கள்.

எந்தவித விளம்பரமோ, ஆடம்பரமோ பிரதிபலனோ இன்றி தூய மனதுடன் நல் எண்ணத்தை மட்டுமே கருத்தாகக் கொண்டு ஏழைகளுக்கு உதவும் வழியில் அமைதியாக சிறந்த பல பணிகளை செய்து உள்ளார்கள்.

## இஸ்லாமிய மாக்கத்திற்காக சாஹெப்பணி

சாஹெப் அவர்களின் சமூகப்பணியில் 2ம் வகையைச் சார்ந்த நூல்கள் இஸ்லாமிய மக்களுக்கு எனவாகும். இரண்டாம் வகையான பிரிக்கக் காரணம் அல்லாஉங்வின் தௌஷீது ஏகத்துவத்தின் போர்வையில் ரசூல்மார்களையும், நபிமார்களையும், வல்ல வலிமார்களான இறைநேசச் செல்வர்களையும், நான்கு மஸ்ஹபுகளையும் சார்ந்த மாமேதைகளான இமாம்களையும், தாறுமாறகவும், தரக்குறைவாகவும், விமர்சனம் செய்து மௌலாது, உருஸ் பாத்தியாக்களையும் தராபிஷ் தொழுகை 20 ரக்காத் பற்றிய குழுப்பம் விளைவிப்பவர்களையும் பாமரமக்களின் மத்தியில் அல்லாஹ், கலிமா தொழுகை என்ற புனிதப்போர்வையில் ஊருருவி

பள்ளிவாசல்கள், மதரஸாக்கள் கல்லூரிகள், அலுவலகங்கள், வியாபாரஸ்தலங்கள் என்று எங்கும்பார்த்தாலும் இதற்கு வாதம் செய்து குழப்பம் ஏற்படுத்துகின்ற கோடாரிக்காம்புகளான தப்லிக் ஜமாத், ஜமாத்தே இஸ்லாமி, தேவபந்து உம்ரி, சலமி, எஸ்அய்எம், அங்நஜாஜஸத் போன்ற ஹொபியாக்களிடம் மக்கள் சிக்கிக்கொள்ளாமல் ஈமானைப்பாதுகாத்து ஈடேற்றும் பெறவேண்டுமென்றும் வாழையடி வாழையாக வந்த அகீதா கொள்கைகளையும் நிறைநிறுத்தி, அதன்படி நடக்கவேண்டி தம் சொந்தத்செலவில் தமிழ், ஆங்கிலம், உருது போன்ற மொழிகளில் குர்ஆன்ஏ, உறத்து, இஜ்மா, இயாஸ் மற்றும் வலிமார்களின் வரலாறுகள் மூலம் ஆனித்தரமான ஆதாரங்களைக்கொண்டு பலநோட்டீஸ்கள், வீரசுரங்களை வெளியிட்டார்கள்.

**இதோ அதன் பட்டியல்கள்:**

1. போலி தப்ல்கு (1957 ஆண்டு பாக்கியத்துள் சாலியாத் மஹல்லா வேலூர் மறுபிரசு)

2. Bogust Thableegh – மேற்கண்டதின் மொழிப்பெயர்பு

3. அரபிதப்ல்க் வாலாவின் அட்டகாசம் (ஷேக்ஆதம் ஹஜீரத் அபர்களின் 15.01.1960ல் நடந்த சம்பவமும், அறிக்கையும் விளக்கங்களுடன்)

4. காயிதேமில்லத்தும், தப்லீக் இயக்கமும் (நோட்டீஸ்)

5. ஒற்றுமையில் அவசியம் (நூருல் இஸ்லாம் பத்திரிக்கையில் வெளிவந்த 22. 12.1956 பாக்கியத் முஃப்தி ஷேகீஆதம் ஹஜீரத் அவர்களின் அறிக்கையும் விளக்கங்களும்)

6. தீய ஹொபிய முகமூடியை கிழிக்கும் பிரசுரம், (கொடிக்கால் பாளையம் அத் அப்துல் மஜீத் அப்பா அவர்களின் மறு அச்சு)

7. ஹெற்றாபிகள் என்றழைக்கப்படுபவர் யார் (முதிப்பர் ரஸில் மஜ்லிஸ் வெளியீடு பாகுக்குடி)

8. "தப்லிக்" சையத் மொஉறித்தின் ஆலில் நாஷர் (விளக்கஉரை)

9. நன்மை செய்து வெற்றியடைய வழி (பாத்திஹா பற்றி சாஹெவின் விளக்கக்கட்டுரை தொகுப்பு)

10. முஸ்லீம் மக்கள் கவனத்திற்கு.

11. நபிபேரர் சின்னத்தின் விளையும் நற்பயன்கள்

12. வங்கியின் வட்டிக்கடுமா?

மேற்குறிப்பிட்டதுப்போன்ற பல பிரசுரஙகளை சேவை மனப்பான்மையுடன் இவற்றைப்போல் உலமாக்கள் போன்றோர் வெளியிட்ட இதர கட்டுரைகளையும் தத் செலவில் பிரசுரித்து வழங்கினார்ர்கள்.

**அன்றும் (நடைபெற்ற) இன்றும் நடைபெறுகின்ற அற்புதங்கள்:**

சாஹெப் அவர்கள் தம் இந்த உலக வாழ்நாளில் நடத்திக்காட்டிய அற்புதங்கள் பற்பல. அதில் அவர்களால் எடுக்கப்பட்ட செய்வினைப்பொருட்களில் பட்டியல் இதோ மாவு பொம்மமைகள், ஊசிகள், குண்டுக்கள், எலுமிச்சைப்பழங்கள் கமிபகள், ஆணிகள், மஞ்சள் துண்டுகள், விபூதி பெயர் எழுதப்பட்ட முட்டைகள் தகடுகள் தாயத்துக்கள், கண்ணாடி துண்டுகள், மூடிகள், ஙெகங்கள், பூக்கள் மற்றும் கோயிலில் படைக்கப்பட்ட இலைகள் போன்ற பல பொருட்களை ஜாதி மத இன பேதமின்ற கூடியிருக்கும் மக்கள் அனைவரின் முன்நிலையிலும் சந்தேகத்திற்கு இடமின்றியும் அன்றும் மட்டுமல்ல இன்றும் தம் தற்காவில் கராமத்துக்கள் நிகழ்த்திய வண்ணம் தம் விவாயத்தை (இறைவனின் சக்தியை) மெய்ப்பித்துக்கொண்டு இருக்கிறார்கள். (இதை மெய்ப்பிக்க அடுத்த பக்கம் உள்ள படங்கள் ஓர் சிறந்த உதாரணமாகும்).

விஞ்ஞானத்தில் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ள இக்காலத்தில் பில்லி சூனியம் செயவினை? ஆவி, பேய், பிசாசு ஜீன் போன்றவற்றை படித்தவர்கள் ஏற்றுக் கொள்வது மிகக்கடினம். ஆனால் சாஹெப் அவர்களின் தர்காவிற்குச் சென்று பார்த்தால் நம்புவார்கள். இதெல்லாம் அப்பட்டமான உண்மை என்று அடித்துக் கூறுவார்கள்.

சாஹெப் அவர்கள் எப்போதும் தங்களை உயர்த்திக்கொண்டதில்லை. தம்மிடம் சிகிச்சை செய்ய வருபவரிடம் முதலில் ஏற்றுக்கொள்வது இல்லை. ஏனெனில் தான் ஒரு சாதாரண மனிதன் என்றே தன்னைக் கூறிக்கொண்டார். தமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட அற்புத சக்தி உண்டு என்பதை அறிந்தும் என்ற ஒரு ஆடம்பரமோ, விளம்பரமோ செய்யாமல் இருந்திருக்கிறார்கள். 360 ஏக்கருக்கு ஜாகீர்தாராக இருந்த இவர்கள் எவ்வளவோ ஆடம்பரமாகவும் வசதியாகவும் வாழ்ந்து இருக்கலாம். ஆனால் இவர்கள் எளிமையான வாழ்க்கையையே மேற்கொண்டார்கள். மற்றொன்று மாற்று உடை. அசைவ உணவுகள் அனைத்தும் இருந்தும், அதிகமாக கஞ்சிகீரைவகைகள் மட்டுமே சாப்பிட்டார்கள். தாம் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளக்கினார்கள். தம்மிடம் சிகிச்சைக்கு வருபவரிடம எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் உதவி செய்தார்கள். பல நாட்கள் தம் வீட்டில் தங்கி மக்கள் வசதியுடன் உண்ண, உறங்க ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். நாம் மக்களிடம், அவரிடம் நெருங்கி பழகியவர்களிடம் கேட்டால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் ஆச்சரியமானதும் அற்புதம் வாய்ந்ததுமாகவும் உள்ளது.

சாஹெப் அவர்களின் யுனானி வைத்தியமுறையின் மூலமும், சிகிச்சை அளித்தார்கள். யுனானி வைத்தியமுறை என்பது ஓர் அரபிய மருந்து முறையாகும். இது ஹோமியோபதி (அ) சித்த வைத்திய முறையைச்சேர்ந்த ஓர் மருத்துவ முறையாகும். இவை அனைத்தும் தம் சொந்த செலவில் மக்களுக்காக செய்தார்கள் மக்களிடம எந்த ஒரு பிரதி பலனையோ (அ) பணமோ அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சாஹெப் அவர்களின் அற்புதங்கள் கூற வார்தைகளால் முடிவதில்லை. சுருக்கமாக சாஹெப் அவர்கள் நிகழ்த்தி உள்ள கராமத்துகளை பின்வருமாறு அறியலாம்.

சாஹெப் அவர்களிடம் 25 வருடம் நெருங்கிய நட்பும் பழக்கமும், அவருடனே இருக்கும் பாக்கியம் பெற்றோர் என கூறும் சையது முஹமது உறசைனி ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். 1974 முதல் 1984 வரை சாஹெப் அவர்களிடம் மிக நெருக்கம் நிறைந்த நட்பு இருந்தது. சாஹெப் அவர்கள் யாரையும் எளிதில் ஏற்றுக்கொள்வது சிகிச்சை அளிப்பதும் இல்லை. முதலில் தங்களுடன் வைத்துக்கொள்ளாமல் விரட்டி விரட்டி விட்டனர். பின்பு நான் மீண்டும், மீண்டும் பிரியமனமின்றி அங்கு சென்றதால் என்னை ஏற்றுக்கொண்டனர்.

என்னால் மறக்கமுடியாத அதிசயம் 1984ல் இங்நிலையில் அந்த கிராமமே பார்த்து ஆச்சரியப்படும் வகையில் நடந்த ஓர் அற்புத நிகழ்ச்சியாகும். அது என்னவென்றால் சென்னையில அப்போது தி.மு.க. ஆட்சிநடைபெற்றபோது எம்.எல்.சி.யாக இருந்தவரின் மனைவி மாளிக்க ஆச்சி என்ற 60 வயது பெண்மணியை சாஹெப் அவர்களிடத்தில் கொண்டு வரும்போது அவர் உடலில் வெரும் உயிர் மட்டுமே இருந்தது. ஊண், உறக்கம், ஏதுமின்றி 2 வருடகாலமாக இதே நிலைதான். பார்க்காத டாக்டர்கள் இல்லை இருப்பினும் அவருக்கு உடல்நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. எனவே சாஹெப் அவர்களிடம் எம.எல்.சி. கூறினார். சாமி நீங்கள் பார்த்து குணமாகும் என்று சொன்னால் எனது மனைவியை அழைத்துபோகிறேன் இல்லை என்றால் இங்கு புதைத்துவிட்டு போகிறேன் என்றார். நான் சாஹெபிடம் மிகவும் மன்றாடி இந்த கேஸை ஏற்க செய்தேன்.

அப்பெண் வந்து 1 மாதம் முடிந்தும் எந்த மாற்றமுமில்லை உணகைக்கண்டாலும் தண்ணீரைக் கண்டாலும் மலம் என்றும், ஜலம் என்று வறி தட்டி விடுகிறார். வெறும் எலும்பும் தோலுமாக உள்ள அப்பெண்ணை சங்கிலிபோட்டு கட்டி வைத்தும் தை அறுத்துக்கொண்டு 12 அடி உயரமுள்ள சுவரை தாண்டி 100 பேர் துரத்தி பிடிக்கும் அளவு நடந்துக்கொண்டார். சரியாக 40வது நாள் நாகூர் ஆண்டவனின் உத்தரவின்பேரில் அப்பெண்மணி குணமடைந்தார். எப்படி என்றால் அப்பெண்ணின் கனவில் சாஹெப் ஜீப் போன்ற ஓர் வாகனத்தை ஒட்ட அதில் நாகூர் ஆண்டவரின் கொடி பற்ககிறது. வண்டியிலன் முன்பு வெள்ளம் ஆற்றில் கரைபுரண்டு ஓடுகின்றது. சாஹெப் அதை தாண்டிசென்று விட்டார் என கூறி அகார பசியுடன் தண்ணீர் ஊற்றிய சோற்றை சாப்பிட்டடார் அப்பெண், பின்பு 2 அடி உயரத்தில் அப்பெண்ணின் வலது கை உப்பியது. அதே வேகத்தில் பள்ளம் விழுந்தது. அதில் இருந்து சிலுமீ ரத்தமும் கொட்டியது. இதுகாலை 6 மணி முதல் 9 மணிவரை நீடித்தது. பின்பு சாஹெப் கட்டுப்போட்டு மாலையில் அவிழ்த்து பார்த்தால் எந்த ஒரு காயத்தின் அரிகுறியும் இல்லை அப்பெண் கையில். இவ்வாறு இப்பெண்ணுக்கு ஏற்படக்காரணம். எப்போதும் எம்.எல்.சி வீட்டிலிருந்து போல் அனைவருக்கும் அப்பெண் தம்கைப்பட உணவு கரிமாறுவார்களாம். இதனால் அவர் மீது பொறாமைப்பட்ட அவரது உறவினர் செய்வின் செய்துவிட்டனர். சாஹெப் அவர்களின் உதவியார் அவர் குணமடையும் பாக்கியம் பெற்றார். இதையரிந்த எம்.எல்.சி. மிகுந்த மகிழ்ச்சியுடன் தமது மனைவியை அழைத்து சென்றார். இவர்கள் மீனவ குடும்பத்தைச் சேர்நதவர் என்பது மிகவும் குறிப்படத்தக்கதாகும். இங்நிகழ்ச்சி நடைபெற்றபோது கிள்ளை

கிராமமே ஓர் அளவிடமுடியாத ஆச்சரியத்தில் மூழ்கியது. அப்பெண் நன் முறையில வீடு சென்றார் என்கிறார் சையது முஹமது ஹினிசனி.

மற்றமோர் முக்கியமான நிகழ்ச்சி கூறியபோது நமக்கு பெரும ஆச்சரியம் ஏற்பட்டது. சாஹெப் அவர்கள் ஆஸ்பத்திரி செல்லும் வழக்கமில்லை. ஆனால் அவர்கள் வயிற்றுவலியால் ஒருமுறை மிகவும் துன்புற்றனர். அப்போது கடலூரில் புகழ்பெற்ற மருத்துவர் ரஹ்மான் அவர்கள் சாஹெபை பரிசோதித்துவிட்டு எக்ஸ்ரே எடுக்கச்செய்து பார்த்ததில் அப்பண்டிஸ் மிகவும் அபாயநிலையில் உள்ளதால் உடனே ஆபரேஷன் செய்யவேண்டும் என்று கூறி என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் பயந்தபோது சாஹெப் கவலைப்பட வேண்டாம் என்று கூறி ஆப்ரேஷன் தியேட்டர் சென்றார். அங்கு சாஹெப் அவர்களுக்கு மயக்கநிலை ஏற்படுத்தியும் எந்த மாற்றமும் அவர் உடலில் ஏற்படவில்லை. மேலும் டாக்டர் வயிற்றை கிரீத்து ஆபரேசன் செய்ய போனால் அங்கு அப்பண்டிஸ் 2 பெருவிரல் அளவிற்கு இருந்ததை காணவில்லை. இதைக்கண்ட டாக்டர் மிகவும் குழம்பிபோய் என்ன செய்வது ஏது செய்வது, தமது மானம், மரியாதை, கௌரவம் அனைத்தும் பேர்யவிடுமோ என்ற காரணத்தால் தடுமாறும்போது டாக்டர் நிலையை புரிந்துக்கொண்ட சாஹெப் மறுபடி தமது வயிற்றில் ஓர் சிறியது அளவு தெரியும்படி ஆபரேசம் முடிக்கசொன்னார். முடிந்தபின் டாக்டரே ஸ்டச்சரில் சாஹெப் அவர்களை தள்ளிக்கொண்டு வரும்நிலையைகண்ட அணைவரும் திடுக்கின்றனர். பின் மேற்கூறிய அனைத்தும் டாக்டர் கூறி சாஹெப் ஓர் அரிய ச்கதி வாய்ந்த மனிதர் ஆவார் என்று கூறினார். இவ்வாறு சையது முஹமது ஷிசைனி கூறினார்.

அடுத்தப்படியாக அஹமது இஹ்சாணுல்லா எ்னபவர் நமக்கு பேட்டி அளித்தார். இவருடைய பேட்டி நமக்கு மிகவும் முக்கியத்துவம் ஆகும். ஏனென்று அவரே கூறினார். 1977 முதல் 1985 வரை துபாயில் இருந்த நான் அங்குள்ள முனஹயத்தினீ, மதனி, இக்பால் மதனி என்ற ஹொபிகளின் தீய உபதேசங்களால் நான் முழு பக்கா வஹாபீயாக நஜாதியாக மாற்றப்பட்டேன். ஆனால் எனி முதாதையர்கள் அனைவரும் சுன்னத்வல் ஜமாத்தை சேர்நத இறைவழியில் வாழ்ந்த முஸ்லீம்கள் ஆவர். நான் ஹொபியாக மாரி பின்பு இஸ்லாமிய கோட்பாடுகளை, வலிமார்க்களை குறைக்கூறியும் அவை இல்லை என்றும், தர்காவில் நடக்கும் அனைத்தும் சைத்தானின் வேலைகள் என்றும் கூறி அவற்றை மறுத்தேன்.

பின்பு 1985க்கு பின் நிறைந்த பொருளாதாரத்துடன் நாடு திரும்பிய நான் முதலில் சோம்பு கம்பெனி, அசைவ உணவகம் போன்ற பலவிதமான தொழில்களை ஆரம்பித்து நஷ்டம

அடைந்தேன். வீட்டில் குழப்பங்களும் கஷ்டங்கள் மற்றும் துணிகள், போர்வைகள் போன்றவை திடீரென தீப்பிடித்தல் ஆகியவை நடைபெற்றன. என் மனைவி செய்வினை என்று கூறியதால் நான் சரி என்று மலையாள ஹஜ்ரதிடம தாயத்துகள் போன்ற அனைத்தும் செய்தும், நிறைய பணம் செலவு செய்தும பலனில்லை.

இச்சமயம் டாக்டர் அன்சார் அவர்களின் மகன் ஏஜாஸ் என்பவரின் உதவியால் நான் சாஹெப் அவர்களை கிள்ளையில் பார்க்க சென்போது எனக்கு நாகூராரின் கருணைக் கூடஇல்லை என்று சாஹெப் அவர்கள் கூறி என்ன விரட்டிவிட்டனர். பின்பு நான் நாகூரில் சென்று மன்னிப்பு கேட்டேன் 10 நாள் கரீத்து நான் சாஹெபை சந்தித்தபோது அன்போடு ன்னனை வரவேற்று 13 வருடங்களுக்கு முன்னால் கற்கண்டு அப்பா என்பவர் தஜ்னுன் என்ற ஜன் மூலம் எங்கள் குடும்பத்திற்கு செய்த செய்வினையை எடுத்தார்கள். இன்றும் எங்களுக்கு செய்வினைக் கஸ்டங்களை போக்கிக் கொண்டு காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் இப்போது நல்லபடியாக சாஹெப் அவர்களீன ஆசியால் இருக்கிறோம் என்கிறார். அஹமத் இஹ்சானுல்லா.

நமக்கு அடுத்து பேட்டி அளிப்பவர், ஹாஜ் டாக்டர் எச்.எம்.ஏ. அன்சாரி எம்.ஏ.எம்.எஸ்ஸி., எப்.ஆர்.இ.எஸ். (லண்டன்) இவர்களின் பேட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகும் மருத்துவத்துறையில் பெயர் புகழ் பெற்ற இவரை காண வேண்டுமாயின் அப்பாயிண்மெண்ட் ஆர்டர் வாங்க வேண்டுமாம் இன்று விஞ்ஞானம் பல துறைகளிலும் முன்னேறியும் பில்லி, சூனியம் பேய், பிசாசு போன்றவற்றிற்கு மருத்தும செய்ய இயலாது என்பதை இவருடைய பேட்டி நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நெருங்கி உறவாடி கபடி நாகமாடி நடித்து வந்த ஒரு நயவஞ்சகயவனினில் கடுமையான செய்வினையால் நானும் எனது குடும்பதாரும் உடல்நிலையும், மனநிலையும் பாதிக்கப்பட்டு தக்க காரமின்றி மருந்து வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு செய்வது அறியாது அலைக்கழிக்கப்பட்ட நேரம் எல்லாம் வல்ல அல்லாஹவின் அருள்கொண்டு சாஹெப் அவர்களை சந்திக்கும் வாய்ப்பும் பெற்று அவர்களின் சீடராகும் நற்பாக்கியம் எனக்கு கிடைத்தது. நான் எனது குடும்ப சூழ்நிலையை விளக்கி சாஹெப் அவர்களிடம் கூறி நிவர்த்தி செய்யும்படி கேட்டபோது அவர்கள் நானோ ஓர் சாதாரண

மனிதன், நீங்களோ பெரும் புகழ்பெற்ற மருத்துவர். சீறும் சிறப்புமாக வாழ்பவர் ஏதாவது ஓர் ஆலிமை பார்ததுக் கொள்ளுங்கள் என்றார். நான் உங்களை தேடி வந்தேன். நீங்கள் எமக்கு உள்ள துன்பங்களை நீக்குங்கள் இல்லாவிட்டால் இறைவன் விட்டவழி என்று ஊருக்கு கிளம்ப முயன்றபோது எமக்கு உள்ள கஷ்டங்களை போக்கி நிவர்த்தி செய்தார்கள்.

எங்களுக்கு உள்ள செய்வினைகளை சாஹெப் எடுக்க எடுக்க எங்களுக்கு மேலும் மேலும் செய்துகொண்டே அந்த நயவஞ்சகன் இருந்தான். நான் சாஹெப் அவர்களிடம் அவனை சும்மா விடுவதா? என்றேன். அதற்கு சாஹெப் கெடுப்பது, கேடுவிளைவிப்பது கயவர் வேலை அதை அகற்றி வாழ்வது உத்தமர் செயல் என்றார். மேலும் அதற்கும் ஓர் முடிவு உண்டு. அல்லாஹ்வின் தீர்பு வரும்போது அது பூரணமாக இருக்கும். அதுவரை அவசரப்படுவது மதியினம். பழிவாங்கும் நோக்குடையோருக்கு எங்கள் தர்பாரில் இடமில்லை என்றார். நான் அந்த செய்வினை செய்த கயவனை விடுவதில்லை என மனதிற்குள் நினைத்ததற்கு வெவ்வளவு பெரிய சவுக்கடி திருந்தினேன். தீர்க்கமாக சாஹெப் அவர்களின் அற்புதங்கள் வார்த்தைகளால் விவரிக்க இயலாதது கண்களால் கண்டுபுரிந்து கொண்டாலே தெரியும் அறியமுடியும்.

பின்பு ஒருநாள் எங்களுக்கு எல்லாம் ஓர் பேரடி விழுந்தது அது சாஹெப் அவர்கள் இறைவணடி சேர்நததாகும். மீளமுடியாத துயரத்தில் ஆழ்ந்தோம். மீண்டும் எங்களுக்கு துன்பங்கள் அந்த கயவனால் பின்பு சாஹெப் தாஹாவில் அழுது மன்றாடினோம். சாஹெப் அவர்கள் எங்கள் குடும்பமே அழியும்படி மாவு பொம்மையில் இருந்து செய்வினைகளை போக்கி எங்களை நிம்மதியடைய வைத்தார்கள் என்கிறார் டாக்டர் அன்சார்.

எஸ். பாபாபாய் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் ஆலி ஜனாப் சையத் ஹாபீஸ் கோயம்புத்தூரைச் சேர்நதவர். இவர் சாஹெப் அவர்களிடத்தில் 1986ல் சீடரானதிலிருந்து என் பணம், பொருள், உடல்? ஆவி, உயிர் போன்ற அனைத்தையும் சாஹெய் அவர்களுக்கு அடிமையாக இருந்து தத்தம் செய்கிறேன் என்ற கூறி தம்மை சாஹெப் அவர்களின் முழு சம்மதத்துடன் தமது உற்றார், உறவினர், சொந்தம், பந்தம், சொத்து, சுகம்

ஆகிய அனைத்தையும் விட்டு இன்றும், என்றும் சாஹெப் அவர்களுக்கு அடிமையாகக் இருக்கிறார். தாம் அடிமையான காரணத்தை அவரே கூறுகிறார்.

1983ம் ஆண்டு சாஹெப் அவர்களை சந்திக்கும் வாய்ப்பை பெற்றேன். எங்கள் பெரிய குடும்பகோஸ்டியை தங்கவைத்து எங்களுக்கு பரம்பரை பரம்பரையாக செய்து வைக்கப்பட்ட பில்லி சூனியத்திலிருந்து எந்த ஒரு பிரதிபலனும் இல்லாம் காப்பாற்றினார்கள். எமது தகப்பனாரும் சகோதரரிகளும் சாவுக்குக்காரணமாக இருந்தமிகப் பெரிய கோரப் பிடியிலிருந்து மட்டுமில்லாமல் சாவின் விளிம்பில 3 மாத கெடுயிலுத்த இந்த அடிமையை காப்பாற்றி கரையேற்றி எமது சாஹெப் அவர்களுக்கு எவ்விதம் நன்றி செலுத்தமுடியும். சொந்தத்தில் நயவஞ்சக நாடகமாடி விடாமல் தொடர்ந்து செய்த செய்வினையை அவ்வப்போது நீக்கி இதில் மிக கொடுமையானது நாயைக்கொண்டு கேரளாவில் செய்த செய்வினையை அந்த நாயை வீட்டிலேலே வெளிப்படுத்திக்காட்டி எங்களை கரையேற்றி வாழ்வுதந்ததாகும். எங்களது சிகிச்சைமுடியும் கட்டத்தில் பல்தா வைத்து காணும்முறையில் ஏ்னறோ எம்மைவிட்டு பிரிந்துசென்ற தகப்பனார். தாத்தா அத்தை ஆகியோரிகளை பல்தாவில் (ஆத்மா) கண்டும் அவர்களுடன் பேசவும ப்ரேமுரீஷ்த் சாஹெப் அவர்களின் அருட்பெரும கருணையால் கிடைக்கப்பெற்றேன். இது முதற்கொண்டு நான் பீரீ முரீஷதின் அடிமையாகிவிட்டேன் என்கிறார். இவர் தற்போது சாஹெப் அவர்களின் குடும்பத்தில ஒருவராக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தர்ஹா சார்பில் பணிபுரிகிறார்.

வக்கீலுதீன் பாய் என்று அழைக்கபடும் அப்துல் வக்கீல் சாஹெப் தர்ஹாகில சாஹெப் வலியுல்லாஹ் அவர்களுக்கு சேவை செய்கிறார். இவர் கூறுகிறார், 1983ல் சாஹெப் அவர்களை அவர்கள் தம்பியிடன் உதவியால் நானும் எனது குடும்பதாரும் சந்திக்கும் பாக்கியம் பெற்றோம். என்னுடைய தவறான நடவடிக்கைகள், பழக்க வழக்கங்களால் எங்களது குடும்பத்தினரும் நானும் பல கஷ்டங்களை அனுபவித்து வ்நதோம். எதிரிகளால் செய்யப்பட்ட செய்வினையால் சூழப்பட்ட நாங்கள் மீளாத துயரத்தில் மூழ்கினோம். சாஹெப் அவர்களின் பேரருளால் எங்களைப் பிடிததிருந்த பேய், பிசாசுகள் செய்வினைக்கோளாறுகள் நீங்கின. ஆனால் நான் மீண்டும் தவறுகள் செய்தேன். மேலும் பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. செய்வினைக்கோளாறுகளால் திடீரென்று வீட்டில அறையிலுள்ள குடைபிடித்து ஊரியும், ஒரு நாள் காலை 3 மணியளவில் மாவினால் செய்த நடுவில அடித்துள்ள ஆணியில

உயிருடன் இருக்கும் பாம்பு தொங்கும், உட்கார்ந்து இருக்கும் போது வீட்டில் ஊர்ந்துவரும். அதை அடித்துக்கொள்வோம். யா சாஹெப் அவர்களின் கருணையால் எங்களுக்கு செய்யப்படும் செய்வினைகள் உடனுக்குடன் தெரிவித்துவிடும்.

இடையில் என்னுடைய தவறால் நான் பல வருடங்கள் நடைபிணமாக இருந்தேன். ஆனால் என் மனைவியின் உதவியால் மீண்டும நற்பாக்கியம் பெற்றேன். எனது குடும்பத்தார் என்றும் சாஹெப் அவர்களின் அருளைப்பெற்றனர். சின்ன சாஹெப் அவர்களின் பேரரருளால் மீண்டும் நான் அவர்களின் பாதஙகளை அடையும் பாக்கியம் பெற்றேன். எனது மனமும் திருந்தியது. மட்டுமில்லாமல என் ஒயிரம் திரும்பியது. எனவே எனது சேவையை சாஹெப் அவர்களக்கு இருந்து செய்கிறேன்.

மேற்கூறிய வக்கீல் பாய் அவர்களுக்கு சாஹெப் அவர்கள் சிகிச்சை அளிக்கிறார்க்ள 11.11.90ல் அப்போது எடுக்கப்பட்ட வீடியோ கேசட்டில் வக்கீல் பாய் அவர்களின் பேய்களும், செய்வினை கோளாறுகளை அடக்கி அவற்றை விட்டு வெளியேறும் முறையையும் சாஹெப் அவர்கள் உட்கார்ந்த இடத்தில் செய்யும் அற்புதங்களை கண்ணால் நானே கண்டேன். இன்னும் இதேபோல் நடக்கின்றன. பேய்கள் போன்ற துர்தேவதைகள் ஆகியவற்றை சாஹெப் அவர்கள் அடக்கும்முறை மிகவும் போற்றுதற்குறியதாகும். இவையனைத்தையும் விளக்க முற்பட்டல் தற்கால சினிமாபடங்களில் திடுக்கிடும் சம்பவங்களை மிஞ்சிவிடும். பகுத்தறிவிற்கு பதிலும் கிடைக்காது. குதற்கவாதிகளும், மேலவாரியா பார்ப்பவர்களும் இதை நம்மமுடியாது. நேரில் கண்கூடாக பார்த்தால் ஒழிய நம்புவது சற்று கடினம் தான். நம்புவோர் நலமாகட்டும்.

**சாஹெப் அவர்கள் சகோதரர் அவர்கள் சாஹெப் அவர்களைப்பற்றி கூறிய ஓர் நிகழ்ச்சி பின்வருமாறு காணலாம்**

எனக்கு மிகவும் இப்போதும் நினைவுக்கு வருவது ஓர் அற்புத நிகழ்ச்சி என்னவென்றால் இளமையில் ஓர் முறை நாங்கள் இருவரும் அஜ்மீர் சென்றோம். அப்போது அங்குள்ள ஹாஜா கரீபேநவாஸ் அவர்களின மகனார் தர்ஹாவில் ஜீயாரத் செய்து கொண்டு இருந்தோம். மாலை நேரமாகிவிட்டது. தர்காவின் உட்கதவுகள் மூடப்பட்டுவிட்டன. நாங்கள் வெளியில் இருந்தோம். தீடிரென சாஹெப் அவர்களை காணவில்லை. நான் அண்ணைக்காணாமல் தவித்தேன். அப்போது என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமல தவித்தபோது அங்கிருந்த 100 வயது இருக்கும் அந்த வயோதிகர் அவர் வருவார் நீங்கள் உங்கள் வேலையை பாருங்கள் என்றார். இருப்பினும் எனக்கு ஒன்றுமே புரியாமல் அங்கே இரவு முழுவதும் தூங்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். சரியாக காலை 4 மணிக்கு என் அண்ணன் அவர்கள் வந்துவிட்டார்கள். நான் பதறிப்போய் கேட்டபோது புன்னகைத்தார். எனக்கு பதிலாய் கிடைத்தது அதுவே தான். பின்னர் நான் புரிந்து கொண்டேன். அண்ணல் அஜ்மீர் வலியுடன் இருந்து வந்து இருக்கிறார்கள். அப்போது முதலே சாஹெப் பல அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார்கள் என கூறினார்கள் சாஹெபின் தம்பி.

சாஹெப் அவர்களின் தம்பி அவர்களுக்கு உடல்மநிலை சரியில்லாதபோதும் எனக்கு பணிவாக அன்போடு பேசினார்கள். அடுத்து அவர்க தம் மூத்த மகனார் சையத்முயின் அஹ்மத் சக்காப் பி.இ.துபாய் (வி.ஏ.இ) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள் எனக்கு பல விதங்களிலும் தர்ஹாவை பற்றி விளக்கங்கள் சொன்னார். எல்லா நாடுகளிலும் தர்ஹக்கள் உள்ளன. அங்கு வலியுல்லா உற்கக்கள் இருந்து அற்புதங்கள் நிகழ்த்துகிறார்கள். மக்கள் அவர்கள் நாடிச் சென்று தமது கண்டங்களை நிவர்த்தி செய்கின்றனர். அலெய்ன், மதனா, பூடான், மலாக்கா தீவு போன்ற அனைத்து இடங்களிலும் தர்ஹா உள்ளது என்றார் சாஹெப்பைபற்றிக் கேட்டதற்கு எங்கள் வீட்டில் தான் சாஹெப் அவர்கள் சிகிச்சைக்காக வரும் மக்களுக்கு சிசிசசை அளித்தார்கள். அவர்கள் அமர்நத இடம், வாசம் செய்த இடம் ஆகிய அனைத்தும் காட்டினார்கள். ஆனால் அவர்களின் விருந்தோமபல் பன்பில் அது நடத்த முறை அதிசயம் தான் கிள்ளை கிராமம் என்நேரம் மக்கள் நிறைய அற்புதங்களை அவர் தம் வாழ்நாள் மட்டுமின்றி இன்னும் செய்து காட்டி கொண்டு உள்ள அற்புதங்களை இன்றைய தர்ஹா பறை சாட்டுகின்றது என முடித்தார்.

11. 11.90ல் சாஹெப் அவர்கள் தஞ்சையில் கொண்டிராகவும் பாளையத்தில் உள்ள ஆசார் தைக்காலில் தமது சகோதரர் வீட்டில் அமர்ந்த பொது மக்கள் அனைவரும் பார்க்க பில்லி, சூனியம், துர்தேவதைகள், பிசாசு, ஆவி போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தார்கள் அதை வீடியோ கேசட்டில் பதிவு செய்து இருந்ததை நான் பார்த்தேன். அதில்

சாஹெப் அவர்கள் அன்பே உருவாக புன்னகையுடன் எந்த அசைவும் இன்றி ஆடாமல் அசையாமல் ஒளி பொருத்திய கண்களுடன் ஹனுமான், எச்சிபிசாசு, முனியப்பன், சனமுனி, ஆயிஷா (ஆவி) போன்றவற்றிற்கு சிகிச்சை அளிக்கிறார்கள். ஹனுமான் சாஹெப் அவர்களுக்கு அடங்காமல் ஆக்ரோ சத்துடன் பற்களை கடித்துக் கொண்டும் அந்த இடத்தையே ரெண்டாக பிளக்கும் செய்துக்கொண்டும் 1 மணி நேரம் ஆட்டம் போட்டு. பின்வு வாழைபழம் சாப்பிட்டு அமைதியானது. இதற்கு முன் சாஹெப் தன்னை இழுத்து வந்துவிட்டதால் சாஹெப் அவர்களை கழுத்தை நெரித்து கொள்ள முயற்சிக்கிறது. ஆனால் ஹனுமானால் அவர்களை நெருங்க முடியவில்லை. முன்னால் இருந்து அவர்களை ஒன்றும செய்ய முடியவில்லை. எனவே பின்னால் சென்று செய்கிறேன். அங்கு வேடிக்கைப் பார்க்கும் பொதுமக்களிடம் சைகையால் யாரும் சொல்லாதீர்கள் நான் பின்னால் சென்று சாகிபை கழுத்தை நெருக்கிறேன் என்கிறது. பின்னே சென்றும் அவரிடம நெருங்க ஹனுமானால் முடியவில்லை. இவை அனைத்தும் நடக்கிறது. நாமாக இருந்தால் பயந்து நடுங்கி துடித்துவிடுவோம். ஆனால் சாஹெப் அவர்களோ அமைதியுடன் எந்த ஒரு சலணமுமின்றி ஹனுமான்னை அடக்கின்றார்கள்.

அமைதியான அனுமான் ஏன், எதற்கு வந்தேன் அவர்கள் குடும்பத்திற்கு செய்த தீமைகள் என்ன? போன்ற அனைத்தையும் சொல்லிவிட்டது. இதைப் போன்ற எச்சிப் பிசாசு, முனி, ஆயிஷா என்ற ஆவி, முனியப்பன் போன்ற அனைத்தும் இவ்வாறே அடங்குகிறது. ஹனுமான் என்பது ஓர் ஒரிபடித்த ஆலீம் பட்டம் கெற்ற மனிதரிடம் வந்தது. ஆயிஷா, சனிமுனி என்பது இப்போது தர்காவில் சாஹெப் அவர்களுக்காக பணி செய்து தன்னை அடியாக்கிக் கொண்ட வக்கீல் என்றழைக்கப்படும் அப்துல் சாஷப் என்பவர் மீது வந்தது.

நானே நேரில் கண்ட காட்சிகள் மிகவும் ஆச்சரியமும், அற்புதமும் நிறைந்ததாக உள்ளது. மக்கள் தங்கள் குறைகளை சாஹெப் அவர்களிடமும், அவர்கள் தாயாடமும் கூறி சிலர் மென்மையாகவும், சிலர் வாய்விட்டும் சிலர் தங்கள் கஸ்டங்களில் நிலை தாங்காமல் கதறவும அழும் காட்சி நாமே அழும் நிலை உருவாகிவிடுகிறது. மக்கள் தங்கள் குறைகளை கண்டங்களை சீட்டில் எழுதி கொடி கம்பத்தில் கட்டி விடுகின்றனர். இந்தக் கொடிக் கம்பமானது சாஹெப் அவர்களின் தலைமாட்டுப் பகுதியில் உள்ளது.

சாஹெப் அவர்களின் தர்கா காலை 6 மணிக்கு திறந்து இரவு 8.30 மணிக்கு பாத்திஹா துவா (அதாவது சாஹெவி அவர்களிடம் விடைப்பெறும் பிராத்தனையும் இறை பிறார்த்தனையும் முடிந்தவுடன் மக்கள் அனைவரும் தம் இல்லஙகளுக்கு திரும்புகின்றனர். வியாழக்கிழமைகளில் மட்டும் கூட்டம் காலை முதல் இரவு 9.30 மணி வரை அலை மோதுகிறது. இந்த நாளில் சாஹெப் அவர்களின் சிறிய மகனாரான தன்னே (சின்ன) சாஹெப் தர்காவிற்கு வந்து 7 மணிக்கு பிரார்த்தனை செய்கின்றார்கள். இந்த பிராத்தனையானது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக கேட்கப்படும் அனைவரின், கண்டங்களும், பினிகளும் நீங்க அனைவரும் வாழ்வில் நலம் பெற வேண்டி இறைவனிடம வேண்டும் ஓர் புனிதமான பிரார்த்தனையாகும். சாதி மத இன வேறுபாடின்றி அனைத்து தரப்பு மக்களும் இதில் கலந்துக் கொள்கின்றனர். இது வாரத்தில் ஓர் நாள் வியாழக்கிழமை நடக்கும் நிகழ்ச்சியாகும்.

சாஹெப் அவர்கள் இவ்வுலகில் இருக்கும்போடு மட்டுமின்ற இப்போதுங்கூட மக்கள் யாரிடமும் செயவில்லாமல் வந்து சிகிச்சைப் பெற்றுச் செல்கின்றனர். தர்காவில் சாஹெப் அவர்களுக்காக பணிவிடை செய்பவர்களை மக்களின் குறை என்ன என்று கேட்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றனர். பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை தேவைகளுக்கும் அங்கு இடவசதி செய்யப்பட்டுள்ளது. மின்சார வசதி, தண்ணீர் கழிப்பிட வசதி போன்றவசதிகளும் உள்ளன. சமுதாய மக்கள் அனைவரும் இங்கு வந்து பயன் பெறுகின்றனர்.

செய்வினையால் பாதிக்கப்பட்ட சாலமோன என்பவர் இப்போது சாஹெப் அவர்களின் தர்கா ஷெரீயில் சேவையானராக இருக்கின்றனர். இவரிடம் நான் சாஹெப்பை பற்றி கேட்ட போது

ரயில்வேயில் திருச்சியில் கிளர்க்காக வேலை செயத நான் 12.06.1972ல் ஆரோக்கிய மேரியை திருமணம் செய்து கொண்டேன். நல்ல நிலையில் குடும்பம் நடத்தினோம். திருமணம் முடிந்ததிலிருந்து என் மனைவியன் உடல்நிலை சரியில்லை. பார்க்காத மருத்துவர் இல்லை. இப்படியே இருக்கின்ற போதே எங்களுக்கு குழந்தைகள் பிறந்தன. 5 ஆண் பிள்ளைகள் இதில் 3பேர் இறந்து விட்டனர். இப்போது ஆரோக்கிய ராஜ், ஆனந்த் உர் ராஜ் என் 23 பேர் மட்டுமே உள்ளனர். குடும்பத்தில் குழப்பங்கள் கஷ்டங்கள், கடன் தொல்லைகள் போன்ற பிரச்சனைகள் நாளுக்கு நாள் குறைவதற்கு பதிலாக அதிகரிக்க ஆரம்பித்துவிட்டன. இதற்கிடையில் கிளர்க் வைவேலையில 25 ஆண்டுகள் எனக்கு சர்விஸ் இருந்துக் குடும்ப சூழ்நிலைக் காரணமாக நானாகவே பணி ஓய்வு 15.03.93 அன்று வாங்கிக்கொண்டேன். இச் சூழ்நிலையில் மனைவியின் உடல்நிலை சரியில்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டே வந்தது. அப்போது நான் 15.08.93 அன்று சாஹெப் அவர்களின் கராமத்துகளை (அற்புதங்களை) கேள்விபட்டோம். எங்களைப் போன்ற சூழ்நிலையில் இருக்கும் மக்கள் அனைவரும் சாஹெப் அவர்களின் தர்காவிற்கு சென்று பயன் அடைகிறார்கள் என்பதை கேள்விப்பட்டவுடன் தஞ்சைக்கு வந்தோம். தர்காவிற்க்கு வந்த பின்புதான் தெரிந்தது எனது சொந்தக்காரர்களே நாங்கள் நல்லபடியாக வாழாமல் சீரழிந்துப்போக செய்வினை செய்து உள்ளனர் என்பது சாஹெப் அவர்களின் கருணையால் சின்ன சாஹெப் அவர்களின் ஆதரவால் எங்கள் செய்வினைக் கோளாராறுகள் ஒவ்வொன்றாக எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எடுக்கப்பட்டும் வருகிறது. நான்கு வருடமாக தர்காவிற்கு வந்துக்கொண்டு உள்ளனர். இவர் சேவையாளராக இருக்கிறார். இவர் மனைவிக்கு இன்னும் செய்வினை சேஷ்டைகள் முடியவில்லை இன்னும் தர்காவில் சாஹெப் அவர்களால் எடுக்கப்பட்டுவருகிறது.

மேற்கூறிய அற்புதங்கள் சாஹெப் அவர்கள் உயிருடன் இருந்தபோது நடைப்பெற்றவை. தம்குடும்பத்தின் நடந்தவைகளை அவரவர்களே விளக்கினார்கள். இப்போதும் இவை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சாஹெப் அவர்களின் கராமத்துகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. எல்லாவற்றையும் எழுத முடியாது. எனவே சுருக்கமாக மேலே கூறி சாஹெப் அவர்களின் கராமத்துக்கள் அற்புதங்கள் உண்மை என நிருபிக்கப்பட்டுள்ளன.

### சாஹெப்பின் இறுதி நாள்:

தம்மையே இறைவனுக்கு அர்பணித்துவிட்ட சாஹெப் அவர்கள் நான் இவ்வுலக வாழ்வைவிட்டு மறைந்த நிரந்தர வாழ்வை மேற்கொள்ளப் போகிறேன் என்ற முடிவைக்கேட்டு அவர்கள் வாழ்நத தமிழ்நாட்டின் இயற்கை கதரியது. புயல் சூறாவளி என்ற உருவெடுத்து கதிகலஙகச் செய்தது. மரங்கள் எல்லாம் தாங்கள் இல்லாத இப்பூலகில் நமக்கு என்ன வேலை, தாங்களுக்கு முன்பே சாய்ந்து விடுகிறோம். என்பது போல மரங்கள் அனைத்தும் வேரோடும் சாய்ந்தன. வானம் கதரி கண்ணீர் வடித்ததால் எல்லா ஏரிகளும் நிரம்பி எங்கும் வெள்ளக்காடாக காட்சி அளித்தது. மின்கம்பங்களுக்கும் சாய்நது மின்சாரமும் இல்லாமல் வானம் இருண்டது. சூரிய வெளிசசமே இல்லாமல் 3 நாட்கள் மக்கள் இருட்டிலேயே தடுமாறினார்கள். என் பீரே முர்ஷன் இவ்வுலை விட்டு போகிறார்கள் என்று அவர்களுடன் பழகியவர்களும், பழகாதவர்களும் அனைவரும் அந்தக் சோகமான நாளை அனுபவித்து இருக்கிறார்கள். சாஹெப் அவர்கள் கடின ஆன்மீக பய்றசிகளில் காரணமாகவும் உப்பில்லா கடின விரதங்களில் காரணமாகவும், வயது முதிற்சியின் காரணமாகவும் இவர்களுக்கு 1991–ல் உடல் நலக்குறை ஏற்பட்ட ஆரம்பித்தது. Angina perkrasis எனும் இருதய சம்பந்தமான நோயால், நோயின் முதிற்சியால் பயங்கர அவஸ்தைப் பட்டார்கள் இவர்கள் பிறருக்காக தம்மைய வருத்திக் கொண்டது அதிகம்.

### பொறுமையின் பிறப்பிடமாக இவர்கள் இருந்தது பெருமையே

அல்லாஹ்வின் நேசர்கள் அவன் அழைப்பை என்றென்றும் மகிழ்வுடன் ஏற்று, அவன் தர்பாருக்கு சென்றிடத் தயாராய் இருப்பார்கள். அந்த அழைப்பை அறிந்திட்ட சத்திய சீலரான சாஹெப் அவர்கள் இவ்வுலக இறுதி காலத்தில் தன் உடல் உபாதைகளுக்கு மருந்து ஏதும் உட்கொள்ளாமல் அல்லா7வின் பொருத்தத்தையே குறிக்கோளாகக் கொண்டு 1412–ல்

ஹிஜ்ராயில் துல்காயிஷா பிறை 8–ம் நாள் 16.11.1991 அன்று காலை நெஞ்சுவலி மிகுதியால் சிரமம் ஏற்று அதை கண்ட துணைவியாரை ஆயத்துல் குர்சி ஓதச் சொல்லயும் தம் இனிய புதல்வருக்கு "யாசின்" அமையுடனும், மாறாத புன்னகையுடனும் இவர் அழியகக்கூடிய உலகிலிருந்து, அழியா உலகிற்கு சரியாக காலை 8.20 மணிக்கு சென்றார்கள். இவர்கள் இறந்த நா் மக்கள் அனைவர் வாழ்விலும் இடிவிழுந்த நாளாகும் என்று கூறுகின்றனர். இங்நிலையிலிருந்து சாஹெச் அவர்களை அடக்கம் செய்ய தஞ்சாவூருக்கு கொண்டு வர மிகவும் சிரமப்பட்டு இருக்கிறார்கள். காரணம் காற்று, மழை பஸ்கள் யாவும் ஓடவில்லை போலீஸ்காரர்கள் ஆங்காங்கே நின்று மக்களை சிரமம் இல்லாமல் இருக்கபும் வெளியில் செல்வதை நிறுத்தவும செய்தனர். ஆனால் சாஹெப் அவர்களை வேனில் கொண்டு தஞ்சைக்கு அன்று நாங்கள் வந்தது ஓர் அற்புதமே ஆகும் என்று அவர்களது சிறிய மகனார் நன்னே சாஹெப் என்று இன்று அனைவராலும் அழைக்கப்படும் சையத் வஜ்ஹீனகி சக்காப் கூறுகின்றார்.

சாஹெப் அவர்கள் இவ்வுலகில் இருந்தபோதும், அற்புதம்ததான், மறைந்த போதும் அற்புதம் தான். மறைந்தபின்னும் அற்புதங்கள் தான் இன்னும் நடந்துக்கொண்டு இருக்கின்றன. (சாஹெப் வலியுல்லாஹ் அவர்களை, அவர்தம் பாட்டனாரின் காவாட்டு பகுதியில அடக்கம் செய்து இருக்கிறார்கள்).

# அத்தியாயம் III

## தர்ஹா ஷெரிப் அமைப்பு

### தர்கா ஷரிப் அமைந்திருக்கும் அமைப்பின் 1991க்கு முன் உள்ள நிலை

1991ற்கு முன்பு இந்த இடம் கருவேல் மரங்களும் முட்களும் நிறைந்த மரம், செடி, கொடிகள் போன்றவை இங்கு இருந்தது. சாஹெப் சாஹெப்பின் குடும்பத்தினர் மட்டுடே இங்கு இறந்தபின்பு அடக்கம் செய்யப்படுகின்றனர். சாஹெப்பின் குடும்பத்தினர் தஞ்சை இரட்டை மஸ்தான் தர்காவில் சந்தனக்கூடு நடக்கும் சமயத்தில் இங்கு சென்று பாத்திஹா செய்துவிட்டு வருவார்கள். மற்றபடி யாராவது இறையடி சேர்த்தால் மட்டுமே இங்கு செல்வது வழக்கம்.

சாஹெப் அவர்களின் இளைய சகோதரர் 1990ல் தர்காவின் கிழக்கு பகுதியிலும் தெற்குப்பகுதியிலும் சுவர் எழுப்பினர். சிக்கப்பூரில் அடங்கி இருக்கும் ஹஜீரத் ஹப்புல்லா ஷா இஷதியில் காதிரி அவர்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னாள் தீர்க்க தருசனம் பகர்ந்து "உங்களால் ஒரு மினாரா கட்டப்பட்டு இருக்கிறது" என்கிறார்கள். இதை உண்மைப்படுத்தும வகையில் 1391–1971 உறிஜ்ரியில் சாஹெப்பின் டைரிக்குறிப்புப்படி தஞ்சையில் மணிக்கூண்டு எதிரில் இரண்டடை மஸ்தான் தர்கா மிராசு கட்டப்பட்டது. இதே போன்ற சின்ன ஹஜ்ரத் ஷா ரஹமத்துல்லா வலிவுல்லாத் அவர்களின் தர்காவின் பரம்பரை டிரஸ்டியும் ஸ்ஜ்தா நிஷீனான பொறுப்பேற்றிருந்த சமயம் முதற்காரியமாக தர்காவை சுற்றியிருந்த மன்சுவரை முழுமையாக அகற்றி வலுவான கற்சுவர் எழுப்பி காலகாலத்திற்கு நிலைப்பெறந் செய்தது சாஹெபின் கட்டிடக்கலை ஆர்வத்தை ஊரீஜிதப்படுத்துகின்றது என்பது இங்கு நினைவுக்கூறதக்கதாகும்.

## தற்போதுள்ள தர்காவின் கட்டிட அமைப்பு

சாஹெப் அவர்கள் இறைவணடிச்சேர்ந்தபின் தஞ்சையில் உள்ள தங்கள் பரம்பரை அடக்கஸ்தலத்திற்கு கொண்டு சென்று அல்லாஹ்வின் உதவியால் நல்லமுறையில் அடக்கம் செய்தார்கள். சாஹெபின் நெருங்கிய மூரீதீன்கள் அனைவரும் வற்புறுத்தவே 1992ல் இங்கு கட்டிடம் எழுப்பப்பட்டது. இந்த தர்கா ஷெரிபின் கட்டிடம பொதுவாக முஸ்லீம்கள் கட்டிடக்கலையில் உள்ளது. 4 தூன்களும் கலசமும் கட்டப்பட்டுள்ளன. கீழே நான்குபுறமும் கைப்பிடி கிரில் உள்ளது. காரணம் சாஹெச் அவர்கள் தம மூதாதையர்கள் மற்றும் பாட்டனார் போன்ற வயதில் மூத்தோர் அடக்கம் செய்யப்பட்டுள்ளதால் நான்கு பக்கமும் சுவர் எழுப்பினால் அவர்களை விட்டு தனிமைப்படுத்தப்பட்டு, அங்கிருக்கும் பெரியோர்களை மரியாதை குறைவு ஏற்படும என்று சுவர் எழுப்ப அனுமதி கொடுக்கவில்லை.

## தர்காவின் எல்லைகள்:

சாஹெப் அவர்களின் தர்கா ஷெரிப் வடக்கும், தெற்குமாக அமைந்துள்ளது. கிழக்கு எல்லை யாகப்பா திரையரங்கம் செல்லும் பாதை, மேற்கு எலலை ராஜா டிம்பர் டிப்போ போகும் பாதை, வடக்கே சிறுகடைகளும் தெற்கு பரிசுத்தம் ஹோட்டலும் அமைந்துள்ளன. சாஹெப் மீது நம்பிக்கையும், மற்றும் பாசமும், நேசமும், மதிப்பும் மரியாதையும் கொண்டவர்கள் சாஹெப் குடும்பத்தினரிடம கேட்டுக்கொண்டதால் தர்கா கட்டப்பட்டுள்ளது என்று சாஹெபின் சிறிய மகனார் நன்னே சாப் என்கிற சையம்ஷா வஜ்ஹன்னக சாக்கப் கூறுகிறார்.

## தர்காவின் வளர்ச்சி:

முதலில சாஹெப் அவர்களின் தர்காவிற்கு முரித்பெற்றவர்களும் (சீடர் அவர்கள் நெருங்கிய நண்பன்களும் மற்றும் அவர்களிடம் சிகிச்சைப் பெற்றவர்களும் மட்டும் வந்துக் கொண்டு இருந்தனர். இப்வோது அனைத்து மக்களும் வருகின்றனர். ஒருவர் மற்றவரிடம் கூறி சாறெப் தாகாவில் அற்புதங்கள் நடக்கின்றன. நாமும் நமது கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்று மக்கள் அனைவரும் சாதி, மத, இன வேறுபாடின்றி வருகின்றனர்.

சிலர் கேஸ்கள் மூலம் தர்காவில் பகல் முழுவதும் இருந்துவிட்டு இரவில் வசதி உள்ளவர்கள் லாட்ஜிலும், உறவினர் உ்ளளவர்கள், உறவினர் வீட்டிலும் தங்கிக் கொள்கின்றனர். வசதியல்லாதவர்கள் சாஹெப் அவர்களின் மகனார் சின்ன சாஹெப் அவர்களிடம் கூறி ஆசார்ஷப்பில் அனுமதிச் சீட்ட வாங்கிக் கொண்டு இரட்டை மஸ்தான் தர்காவில பருத்துக்கொள்கின்றனர். இங்கு தினமும் வருவோரும் இருக்கிறார்கள். வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களிலும் வியாழக்கிழமை மட்டும் வருவோரும் உள்ளனர். சிலர் தங்களின் குடும்ப சூழ்நிலை நிவர்த்தியானவுடன் ஒரு குறிப்பிட்ட நாள் வரை தொடர்ந்து வருகிறேன். (அல்லது) வாரம் ஒரு வியாழன் இப்படி 7,9,11 வாரங்கள் வருகிறேன் என்ற பிரார்த்தனை செய்து அதன்படி நிறைவு செய்வோரும் உள்ளனர்.

சிலர் இனிப்பு (பொங்கல்) சாதம் செய்து வந்து பாத்திஹா ஓதி அனைவருக்கும கொடுக்கின்றனர். சாதாரணமாக பட்டாணி, கல்கண்டு, சர்க்கரை போன்றவை வைத்து பாத்திஹா ஓதுகிறார்கள். சாஹெப் அவர்களின் அடங்கறுதலத்திற்கு பூ போர்வையும், உதிரிப் பூக்களும், ரோஜாப் பூவும் போடுவோரும் உண்டு. பால், பழம் போன்றவை வைத்து பாத்திஹா செய்வோரும் உண்டு. மொத்தத்தில் தாம் என்ன நினைக்கிறார்களோ அதைப் போல் மக்கள் செய்துவிடுகின்றனர். சாஹெப் அவர்களின் கொடிக் கம்பத்தில் சீட்டு கட்டி விடுகிறார்கள்.

சாஹெப் அவர்களின் நோக்கம் அன்றும், இன்றும் என்றும் அனைவரிடமும் பிரதிபலன் எதிர் பாராமல் நடந்துக்கொள்வதே ஆகும். முன்பு ஆறு போல் இருந்த சாஹெப் அவர்களின் வளர்ச்சி இப்போது பெரிய கடலாக மாறியுள்ளது. இப்பூலகில் இருந்தபோது தம்மை ஓர் பெரிய மகனாக காட்டிக் கொண்டதில்லை. எல்லோருக்கும் சிகிச்சை அளிக்க சம்மதிப்பதும் இல்லை. தம்மை முழுவதும் நமபி, இறைவனை நமபி வந்தவர்களை மட்டுமே சாதி, மத, சமய, இன வேறுபாடுகள் ஏதும் இன்றி மக்கள் வந்து தமது நிலையை கூறி செல்கின்றனர். தீய சக்தினால் ஏற்படும் அனைத்து கஷ்டங்களும், துன்பங்களும் துயரங்களும், தம்மை நாடிவரும் அனைத்து தர மக்களுக்கும் நிவர்த்தி செய்வதிலேயே கண்ணும், கருத்துமாய் இருந்து நடைப்பினமாய் உள்ள அனைவருக்கும் மறுவாழ்வுத் தந்து பக்க துணையாக, பலமாக, சந்தோசத்திற்கு பாலாமாக இருந்து மக்கள் அனைவரையும் மகிழ்விக்கிறார்கள்.

மேற்கூறியவற்றின் மூலம் சாஹெப் அவர்களின் தர்கா ஷெரியின் வளர்சிச்ப பற்றியும், மக்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும் நாம் தெளிவாக அறிய முடிகிறது. சுற்றுப்புர மக்கள் மட்டுமில்லாமல் தமிழகத்தின் அனைத்து பகுதி மக்களும் சாஹெப் அவர்களால் பயன் பெறுகிறார்கள் என்பது அப்பட்டமான உண்மையாகும்.

## தர்காவிற்க்கும், பள்ளிவாசலுக்கும் உள்ள வேறுபாடுகள்:

பள்ளிவாசல் என்பது இறைவனின் வீடு. இதில் இறைவன் ஒருவனே என்றும் அவன் ஈடு இணை, துணை அற்றவன் என்றும், அனைத்தும் உலகையும் படைத்து வளர்த்து பரிபக்குவதுப்படுத்தும் நாயன் என்றும், வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவன் தான் என்றும், முகம்து நபி (ஸ்ல்) அவர்கள் உண்மையான இறுதித்தூதர் என்றும் உள்ளப்பூர்வமாக ஏற்று அல்லாஹ் ஒருவனுக்கே (நன்றி செலுத்தும்) வணங்கும் இடமாகும்.

தர்ஹா ஷெரிப் என்பது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நேசிக்கப்படுகின்ற இறைநேசச் செல்வர்களின் புனித அடக்கஸ்தலமாகும். இறைவன் தான் படைத்த படைப்புகளிலேயே மிகச் சிறந்த படைப்பு மனித படைப்பாகும். மனிதர்களில் சிலரை மட்டும் தேர்ங்தெடுத்து அவர்களுக்கு சக்தியைக் கொடுத்து மக்களை நேர்வழிப்படுத்தித, நபி பெருமானாரின் வழியில் நடத்து நேசத்தைப் பெற்ற இறை நேசகர்களின் புண்ணிய, புனித அடக்கஸ்தலஙகளேதர்காவாகும், தமக்கென வாழாமல் பிறருக்கென வாழ்ந்து தம்மை இறைவனுக்காக அர்பணிந்த மகனான்களான வலியுல்லாக்களின் (லேல்லது அவ்வுலியாக்களில் கபிரு (அட்க்கஸ் தலத்திற்கு) களுக்கு சென்று அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தும் இடமும் தீய சக்திகளால் பிடிக்கப்பட்டவரின் நிவர்த்திப்பெறும் இடமும் தர்காவாகும். மேற்கூறியவையே தர்கா – பள்ளிவாசல் வேறுபாடுகளாகும்.

## சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் வழியல்:

சாஹெப் வலியுல்லாஹ் அவர்கள் இவ்வுலகவாழ்வை விட்டு நீங்கினாலும், அவர்களுடைய முரீதுகளையும், தன்பால் நம்பிக்கை வைத்து அன்பு கொண்டுள்ளளோரையும், அல்லல் அடைவோருக்கு அவர்தம் குறைகளை அமைதியோடு, அன்போடு, ஆர்வத்தோடுக் கேட்டு, அவர்களுக்கு ஏற்ற வகையில் ஆறுதல் கூறி, பரிகாரத்திற்கான வழிமுறைகளை

விளக்கி துயர் துடைக்கும் நற்பண்பினை செல்வனே செய்திட வழிவகை செய்துள்ளார்கள். எளிமையானத் தோற்றமும், தண்ணடக்கமும், அறிவாற்றலும் நிறைந்த சுயநலமற்ற, கருணை உள்ளம கொண்ட அன்பு நிறைந்த சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் இளைய மகனாராக சையத் வஜ்ஹன்னகி சக்காப் வலியுல்லாஹ் அவர்களின் இளைய மகனாரான சையத் வஜ்ஹன்னகி சக்காப் அவர்களே, தம் தந்தை பணியினைத் தொடர்கின்றார்கள்.

இறைவன் அருளால் ரசூல்லாஹ் அவர்களின் துவா பரகத்தால் வலிமார்களின் தலைவரான ஹஜ்ரத் ஷைய்யதினா ஷேக் அப்துல் காதர் ஜெயிலானி அவர்களின் உத்தரவால் தமது இரு ஹீஜ்ரி 1410 (8.7.1990) துல்உற் மாதம் 14ம் தேதியன்று தமது மகனார்களுக்கும் இங்நிலையில் அனைத்து மஷாயசீன்கள் முன்னிலையிலும், வம்சாவழி முறைப்படியும், சம்பிரதாய சடங்குகளின் படியும், சான்றோர்கள் ஊர்மக்கள் முன்நிலையில் தமக்கு கிடைத்த அரிய பொக்கிஷமான கிலாபத்தை (கலிபா பதவி) வழங்கினார்கள்.

இந்த கிலாபத் என்ற கலிபா பதவியை தமது தந்தையார் கொடுத்த பின்னும், சாஹெப் வலியுல்லாஹ்வின் இளைய மகனார் சையத் வஜ்ஹன்னகி சக்காப் அவர்கள் தீன் பணியில் தம்மை முழுமையாக, இன்னும் அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். தமது தந்தையாருக்குப்பின் மக்களுக்கு அனைத்து உதவியும் செய்கிறார்கள். மக்கள் இவர்களை அன்போடும், மதிபோடும், மரியாதையயோடும் சின்ன (சோட்டே) சாஹெப் என்றழைக்கின்றனர்.

# முடிவுரை

சாஹெப் அவர்கள் வானத்தில் மின்னும் நட்சத்திரம் போல் வலிமார்களின் நட்சத்திரம். சாஹெப் அவர்கள் உலக மக்களில் சூரியனைப் போல் பிரகாசித்தார்கள். கலங்கி நிற்கும் மக்களுக்கு கருணை காட்டும் வள்ளலாக திகழ்ந்தார்கள். கண்ணீருடன் வந்தவர்களை ஓதி தண்ணீர் கொடுத்தே குணப்படுத்தினார்கள். சாஹெப் அவர்களிடம் புலம்பியவாறு வந்த ஆயரக்கணக்கான மக்களுக்கு போகும்போது மகிழ்வுடன் வாழ்க்கையில் நம்பிக்கையுட்ச் செல்வார்கள். அவர்கள் கராமத்துகளுக்கு எல்லையே இல்லை. புகழ்ச்சியில ் பொய்மை இல்லை. வாய்மையில் சிறந்தவர் தானத்தில் வள்ளல், துன்பம் என்ற கருங்கடலில் சிக்கித தத்தளிக்கும் மக்கள் வாழ்வை மின்னலாக மின்ன வைக்கும் சக்தியும், இல்லை என்று அல்லல்படுவோருக்கு அள்ளிக் கொடுக்கும் மனமும், துன்பமும், பினியும் புடை சூழ, இனி உலகில் நமக்கு இடமில்லை என்று கதிகலங்கி நிற்பவர்களுக்கு உலகில் உங்களுக்கும் இடமுண்டு என வழிகாட்டிய மகான் தன் விரலின் ஓர் அசைவால் பல ஜின்களையும் சைத்தான்களையும் பணிய வைத்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை வாழவைத்த பெர மகான ஆவார்கள்.

சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், சிறந்த அமலியாத் நிபுனர், சிறந்த மரிக்கமேதை சீரிய குடும்பத்தலைவர், சக்திமான, இறைநேசர் செல்வா இவரின் பொன்மொழி "உடைந்த உள்ளஙகள் தான் இறைவனுக்கும் பிடிக்கும்" எனவே பொறுமையை கடைபிடியுங்கள் என்பார்களாம். பொறுமையான சுபாவம் மென்மையாக, மெதுவாக ஓர் சில வார்ததைகளே பேசினாலும், தெளிவாகவும் கம்பீரத்துடனும் பேசக்கூடிய தன்மை வாய்ந்தவர்கள் சாஹெப் அவர்கள் தமிழ், ஆங்கிலம், உருது அரபி, பார்ச் ஆகிய அனைத்து மொழிகளையும் கற்றுத் தேர்நதவராவார்கள். கிள்ளை ஹஜ்ரத் சையத் ஷா ரஹம்த்துல்லாஹி வலியுல்லாஹ் அவர்களின் சுமார் 240 வருடங்களுக்கு முன் கையெழுத்துப் பிரதியாக அவர்கள் எழுதிய "சிர்ருன்னுமா" என்னும் பாரசீக நூலுக்கு அருமையான, எல்லோரும் போற்றும் விதத்தில் முன்னுரை எழுத 41 கையெழுத்துப் பிரதியை பதிப்பித்தார்கள். சமயவேறுபாடுகளைக் கடந்து கவிஞர் அல்லாமா இக்பாலின் உருது கவதையை மொழிப்பெயர்த்தார்கள்.

இவர்களுக்கு பொது அறிவு அதிகம். மிக முக்கியமானது என்னவென்றார் எப்போதும் சிறந்த ஞாபசக்தி உடையவராக இருந்ததுதான் உலக விஷயங்களை கணிப்பதில் இவருக்கு நிகர் இவரே அலுவலக பரிபாலன பிணக்குகளானலும் சரி, பஞ்சாயத்து சட்ட சிக்கள்களானாலும் சரி இருந்த இடத்தை விட்டு நகராமல், நல்ல தீர்புகான்பது இவரது அற்புதங்களில் ஒன்றாகும்.

ஒரு லைப்பரி வைக்கும் அளவுக்கு இவரிடம பீரோக்கள் நியை பெரிய, பெரிய மகான்கள் எழுதிய காணக்கிடைகாத அரிய உருது, அரபி பார்சி மற்றும் மேற்கண்டவைகள் தமிழ், ஆங்கில மொழிப் பெயர்ப்பு ஆகிய நபுத்தகங்களைச் சேகரித்து வைத்து இருக்கிறார்கள். மற்றும் தம் சொந்தச் செலவில் நாட்டுக்காக மக்களுக்காக, சமூதாயத்திற்கா, அருங்கக் கூரின் தன்னைப் பற்றி கவலைக் கொள்ளாமல் பிறருக்காவே வாழ்ந்த மாபெரும் மகான் ஆவார்கள்.

"தோன்றி புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவர் அவர்களின் வாக்குப்படி சாஹெப் அவர்கள் என்றும் மங்கா புகழோடு வாழும் வகித்தமான தங்கமாக வாழும் இறை நேசச் செல்வர் ஆவார். வபாத்துக்கு (இறப்புக்கு) வின்பும் உறையாத்து உடையவர்களே அவர்கள் அழியா திரேகத்தை உடையவர்கள். அவர்கள் விவசாதத்துக்கு பின்பும் கப்ருலிருந்தும் புறப்பட்டு நடமாடும சக்தி உடையவர்கள். அவர்கள் எப்போதும் அற்புதங்கள் செய்ய வல்லமையுடையவர்கள. அவர்கள் பால் வஸ்லா தேடுவது ஆகும். வசீலா என்பது பொருட்டால் என்பதாகும்.

இவ்வுலக வாழ்வை முடித்த பின்பும் மக்கள் அனைவருக்கும் மேலும், மேலும் நன்மைகள் செய்து கொண்டு இருக்கிளார்கள். இவர்களை பற்றிய பேச்சுத்தான் தஞ்சையில் மட்டுமில்லை வேறு எல்லாயிடமும் அவ்வியாக்கள் அனைவரும் நன்மையான இறை நேசர் தான் என்பதை சாஹெப் அவர்களுடன் தர்காவில் நடக்கும் அற்புதங்கள் சான்றுகளாகும்.

'இனம், மொழி, மார்க்கம், தேசம், குலம் எல்லாவற்றையும் கடந்த மனித வர்க்கத்துடன் அன்புடன் பழகி அவர்களுக்கு நன்மை பயக்கும் செயலில் இடுபடவேண்டும் என்று நபியவர்கள் உத்தவிட்டார்கள். ஜீவப் பிராணி அனைத்தும் இறைவனுடைய குடும்பமே என்ற வார்ததை மூலம அன்புடன் நடந்துக் கொண்டார்கள்.

(ஆதாரம் குப்ராணி கிரக்தம்)

பைபிளின் சகோதரர்களே! வாருங்கள். ஒருவருக்கொருவர் அன்புக் கொள்வோம். அன்பு இறைவனால் உருவப்பட்டது. எவனிடத்தில் (இருதயத்தில்) அன்பு இருக்குமோ அவன் இறைவனை அடைவான் அன்பில்லா இருதயமுடையவன் இறைவனை அடையான். ஏனெனில் அன்பே கடவுள்".

(ஆதாரம் : பரிசுத்த பைக்றள்ளா)

"உங்கள் எல்லோருடைய கருத்து ஒன்றாக இருக்கவேண்டும். எங்களுடைய மனம் ஒரே கருத்தை என்ன வேண்டும். யாவருடனும் நன்மையாக நடக்க வேண்டும் என்ற குறிக்கோள் உங்களுக்கு தருகிறேன். அந்த குறிக்கோள் கொண்டே பூஜையும் ஆராதனையும் செய்யும்படி கூறுகிறேன்.

(ஆதாரம் : ரிக் வேதம்)

மனிதனை மனிதன் மதிக்கும் உன்னத பன்பு உலகத்தில் எழுப்பட்டு வரும் இக்காலத்தில் தமிழகத்தின் பிறருக்கு வளர்ந்து, வாழ்ந்து நாளது வரையிலும் சாஹெப் வலியுல்லாஹ் அவர்களால் மனித வர்க்கம் பெற்று வரும் அந்த மாபெரும் மகானின் நற்பணிகளை கூறும் உன்னத வரலாற்றைதான் மேலே சமர்ப்பித்துள்ளேன்.

மனித குலத்திற்கு மதிப்புத் தரும் இதுபோன்ற மகான்கள் நம் நாட்டிலும், தமிழகத்திலும் குடிக்கொண்டிருப்பது பெருமைக்குரியது. இத்தகையோரை நாம் மகனாக ஏற்றுக்கொண்டு இதுபோன்ற மகான் எங்நாடு, எம்மார்க்கம், எவ்வினம், எந்த ஜாதி எம்மொழி உடையவராக இருப்பினும் அவரை மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டு மதித்தும் போற்றலே நமது கொள்கையும் விஸ்வாசமும் ஆகும். கலப்படமற்ற தூய அன்பே போதுமானது. சகல மனிதரும் ஜரினனே என்றுக் கூறி இத்துடன் எனது முடிவுரையை முடித்துக் கொள்கிறேன்.